தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-

மலர் 2 | சென்னை | 14—1—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 35

சூதுக்காரன், சுரண்டற் பேர்வழி, எத்தன், முடிச்சவிழ்ப்போன் — எவன் எவனோ சொல்கிறான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'—என்று.

வார்த்தை ஜாலத்தை மூலதனமாகக் கொண்டோர் முதல், வழிப் பறிக் கொள்ளைக்காரர்கள் வரை, அத்தனை பேருக்கு மிடையேயும் சிக்கித் தவிக்கிறது 'யாதும் ஊரே— யாவரும் கேளிர்!'

அதோ அந்தத் 'திடீர்க் கிராமத்தை'ப் பாருங்கள்! போன கிழமை சிவகங்கையிலே இருந்தார்கள்— நேற்றிரவு இங்கே குடியேறி இருக்கிறார்கள். இதயம் விட்டு அவர்கள் சொல்ல வேண்டிய முதுமொழி— 'யாதும் ஊரே—யாவரும் கேளிர்!' ஒற்றுமைக்கும், கடமையாற்றும் தன்மைக்கும் எறும்புக்கு ஒப்பானவர்கள். அவர்களுக்கு நேரமேது, ஓய்வேது வெட்டிப் பேச்சுக்கும் வேதாந்த விமர்சனத்திற்கும்!

''நாகரிகமற்றவர்கள்தான்; அவர்களுடைய மேனி நாற்றம் பிடித்ததுதான்! ஆனாலும், மிருக நிலை கடந்துவிட்ட மனிதப் பண்புகள் அவர்களிடம் இருக்கின்றனவே! ஒருவேளை, அநாகரிகத்திற்கு, மனிதாபிமானத்தை வளர்க்கும் தனித் தன்மை உண்டோ? இனப்பற்றைக் கிளறிவிடும் சக்தி மிகப் பெற்றிருக்கிறதோ? தன்மொழி, கலாச்சாரம் இவை பால் நீங்காப் பற்றுக் கொண்டதோ? அப்படியானால் வளர்ந்துவரும் நாகரிகம் சரிந்து போகட்டும்! அழிந்தொழியட்டும்! மனிதத் தன்மையை அரித்துத் தின்னும் 'மேம்பட்ட' நாகரிகம் வேண்டாம்! தேவை இல்லை.''-அவர்களைப் பார்த்தவுடன் இப்படித்தான் நினைத்தாள் செல்வ நாயகி.

செல்வநாயகி கலெக்டரின் மனைவி. அவர் பக்கத்தூரில் நடைபெறும் பிரசவ விடுதி திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார். அதனால் செல்வம் மாலை நேரத்தில் உலாவச் செல்ல முடிந்தது.

''எவ்வளவு அழகாக இருக்கிறார்கள்! காதிலும் கழுத்திலும் கண்ணாடிச்சரம்! இடுப்பிலே ஒட்டுத் துணிப் பாவாடை! மூங்கில் காடென வளர்ந்து கிடக்கும் கருங் கூந்தலுக்குக் கட்டுக் காவலாகத் தன் கையாலே உருப்பெற்ற கொண்டை ஊசி! இத்தனை அலங்கோலங்களையும் மிஞ்சிக் கொண்டுதான் அவர்களின் இளமை எழில் மின்னலிட்டு ஒளிக் கற்றைகளைக் கிளறி விடுகிறது.''

உலாவச் சென்று தூரத்தே நின்று, தத்துவத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்த செல்வத்தின் கண்களுக்கு அந்த இளங்குறத்தி அகப்பட்டுவிட்டாள், ''பட்டு நிகர் முகத் தழகி, சிட்டுக் குருவித் துருக்குக் காரி! நங்கை இவள் நரிக்குறத்தி வம்சந்தானா? ஐயய்யோ! வைரத் தோங்கட்டானும் வாயல் புடவையும் எந்த மூலைக்கு?'' என்று வாய் விட்டுப் புலம்பிவிட்டாள் செல்வநாயகி. துடித்தாள்! உள்ளங்கால் முதல் உச்சிவரை தன்னுடலை ஒரு முறை பார்த்துவிட்டு, தன்னைத் தானே பழித்துக் கொண்டாள். நாளைய நிலைமையை முடிவு கட்ட முடியாத நாதியற்றவர்களின் உடம்பிலே இருக்கும் எழிலும் பொலிவும் தன்னிடமில்லையே என்று பொறுமினாள்! ஒரு கையிலே காலங்காட்டி, மறு கையிலே வைரவளையல், கழுத்திலே முத்து மாலை—இத்தனையும் வீண் வீண் என்று அவைகளின் மீது எரிந்து விழுந்தாள். அதற்குள்ளாக அந்த இளங்குறத்தி, செல்வ நாயகியின் அருகில் வந்து விட்டாள்.

குறத்தி! சதை ஈறுகளிலே கருப்பேறி இருக்கும், அவள் சரீரமெங்கும் பச்சை குத்தியிருப்பாள்—இந்த அங்க லட்சணத்தை அவள் படு தூரணமாக்கிவிட்டாள். நூடவில்லைக் கோர்வை நிகர் பல்வரிசை! பாலைவனப் பழுப்பு மணற் காடொத்த மென்மைமிகு உடலமைப்பு!—செல்வம் திடுக்கிட்டாள்; பெருமுச்சு விட்டாள்.........எங்கிருந்தோ ஒரு அனுதாபம் குறத்தி மீது! எப்படியோ வந்து பிறந்தது செல்வத்திற்கு!

'சாமீ...க்கி சலாம்! சாமீக்கி சலாம்!-' குறத்தி ஆரம்பித்தாள் இப்படி.

வாலிபர்கள் ஏறெடுத்துப் பார்த்து விட்டால் வாயு வேகத்தில் மறைய வேண்டிய பருவத்தினள் வலிய வந்து வாய்விட்டுப் பேசுகிறாளே! இப்படியும் ஒரு வதப்பாரா? என்றுதான் செல்வத்திற்குப் பட்டது. ஆனால் இமைமூடி இருவிழியையிருட்டறைக்குள் தள்ளிவிடவில்லை அவள். அழகுச் சுமை தாங்கி எதிர் நிற்கும் குறத்தியை வெறுத்து விடவுமில்லை. பெண்மைக் குரிய தனிப்பண்பு-தன் இன ஜாதியை அணைத்துக் கொள்ளும் பெருந்தன்மை அந்தப் பெரிய இடத்துக் காரியிடமும் இருக்கத் தான் செய்தது. அருகே வந்தாள்! இன்பத்துப் பாலுக்கு இலக்கணம் கூறும் அந்த நாடோடி நளின சிங்காரியது பருவத்தின் சாகுபடியைத் தன் இருவிழிகளாலே அன்புருவில் மேய விட்டாள். சலித்ததா? புளித்ததா? அது எழில் விருந்து! கட்டழகுக் கருவூலம்! திகட்டாதா என்ன!

பெண்களைப் பொறாமைக்காரர்கள் என்பார்கள், பிறர் வாழச் சகியாதவர்கள் என்று சொல்லுவார்கள். அந்தத் தீக்குணங்கள் உருவெடுப்பது எப்போது? அவர்கள் சுகத்தைக் கரைத்திடப் பிறர் நினைக்கும் போதுதான்-அவர்கள் குறி வைக்கும் ஒன்றின்மீது மற்றவர் நாட்டம் தொடுக்கும் போதுதான் பெண்மை போர்க்கோலம் பூணுகிறது. அது வரை எத்தகைய பெண்ணிடத்திலும் தாய்க் குணம் குடிகொண்டிருக்கத்தான் செய்கிறது.

செல்வமோ கலெக்டரின் மனைவி. எதிரிலே நிற்பவளோ ஊர் சுற்றி. ஆனாலும் இருவருக்குமிடையே ஏதோ ஒரு இணைப்புச்சக்தி படர்ந்து நின்றது. அன்பாகப் பேசிக்கொண்டார்கள். வியப்பூட்டும் நரிக் குறவர் ஜாதியின் நடைமுறைக் கொள்கைகளை அவள் சொல்ல, செல்வம் கேட்டுக் கொண்டே வந்தாள். இருவரும் 'பொன் மலர் நிலைய'த்திற்குள் நுழைந்தார்கள்-அதுதான் செல்வத்தின் மாளிகை. நேரம் போனதே தெரியவில்லை. இருவரும் பேசிக் கொண்டே இருந்தார்கள். வீட்டு முகப்பின் பாதரச விளக்கை ஏற்றி விட்டான் வேலைக்காரன். குறத்தி துடித்தாள், ''பொழுது போய் விட்டது. எங்களவர்கள் என்னைத் திட்டுவார்கள் நான் போக வேண்டும்'' என்றாள். குறவர் ஜாதியின் கட்டுப்பாடான வாழ்க்கை செல்வத்திற்குப் பிடித்திருந்தது, ஏனோதெரியவில்லை. குறத்தி விடை பெற்றாள். செல்வத்திற்கு அவளைக் குடிசைக்குப் போகச் சொல்ல விருப்பமில்லைதான். என்ன செய்வது! அவளோ பறக்கிறாள் மற்றவர்கள் ஐயுறுவார்கள் என்று. ''நாளைவா அதுவும் காலையே வந்துவிடு'' என்று சொல்லி அனுப்பினாள் செல்வம்.

குறத்தி போன பிறகு செல்வத்தின் இதயம் தெளிவற்று இருந்தது. ''குறத்தி என்கிறாள். தடையின்றித் தமிழ் பேசுகிறாளே! குறவர் குடும்பத்திலே வாழ்கிறாள். அவர்களுக்குரிய தனிக்குணங்களை இவளிடம் காண முடியவில்லையே! கறை படியாத பற்கள்! பச்சை குத்தாத மேனி! நெளிவில்லாத நடை!''—செல்வம் இப்படிக்குழம்பிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை குறித்த நேரத்தில் குறத்தி வரவில்லை. அவளுக்காக எடுத்து வைத்திருந்த பலகாரங்கள் வீணாயின. மாலையில்தான் வந்தாள். ''குறவர் ஜாதியில் எல்லோரோடும் ஒத்து வாழாவிட்டால் பாய்ந்துவரும்

— 3-ம் பக்கம் —

உள்ளே: 'இராவணன்'-ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை!

இராவணன்

- ஈரோட்டான் -

இலங்கையின் இணையற்ற பெருவேந்தன் இராவணன். நிகரற்ற உடல்வலியும் அளவற்ற கல்வியறிவும், வரம்பற்ற படைவலியும், உன்னதமான கலையறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற உயர்செம்மல். நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகக் களம் பல கண்டு, போர் பல புரிந்து, வெற்றி பல பெற்று மக்களை மகிழ்வித்த மாண்புடையோன். இலங்கையென்னும் தன்னுட்டைப் பொன்னுடாக்கிய புரவலன். வெற்றிநங்கை என்றும் தழுவி மகிழத் தன் மார்பை அவளுக்குத் தந்த விறலோன். மலை கலங்கினும் நிலை கலங்கா மனோவுறுதியும், தளராத தன்னம்பிக்கையும் தன்பால் கொண்டிலங்கிய தனிப்பெரு வேந்தன். இத்தகைய பெருவேந்தன் நாட்டு மக்களிடையே நல்லதொரு புகழிடத்தைப் பெற முடியாதபடி கவிஞரென்று பெயர் தாங்கிய ஒரு சிலர் அவனது மாசற்ற பெயர்க்கும் புகழிற்கும் மாசு கற்பித்து விட்டனர். மதவெறியும், மடமையும் மக்கள் கொண்டிருந்த காரணத்தால் அம் மாசை மக்கள் அறிய முடியாது போயினர். எனவே ஏற்றப்பட வேண்டிய இராவணன் இகழப்பட்டு, தூற்றப்பட வேண்டிய இராமன் போற்றப் பட்டான்.

இராவணன் என்றதுமே பத்துத் தலைகளைக் கொண்டவன், பயங்கர உருவினன், பாம்பன்ன தலைமயிரும், பாறையன்ன கருத்த மேனியும், குகையன்ன வாயும், கோரைப் பற்களும் கொண்டுள்ள கோரவடிவினன் என்று மக்கள் எண்ணுகின்ற அளவிற்கு மடமையில் ஆழ்த்தி வைத்திருக்கின்றனர் சில மதிப்புமிக்கவர்கள். தேடித் தேடிச் சொன்னல் சீதையைக் கவர்ந்தான், வேள்வியை அழித்தான், முனிவர், தேவர்களுக்குத் தொல்லை கொடுத்தான் என்ற இதுபோல சிலபல சத்தற்ற, பொருத்தமற்ற குற்றச்சாட்டுகளை இராவணன்மேல் கூற முடியுமேயல்லாமல் மறைந்திருந்து அம்பிட்டான், நிறை கர்ப்பிணியாகிய தன் மனைவியைக் காட்டிற்கனுப்பினுன், தன்னுட்டின் தவஞ்செய்த சூத்திரன் ஒருவனை அநியாயமாகக் கொன்ருன் என்ற இன்னோரன்ன மன்னிக்க முடியாத பெருங் குற்றச்சாட்டுகளை அவன் மேல் (இராவணன் மேல்) சுமத்த முடியாதே!

திருமால் அவதாரமாகிய இராமபிரானின் பிறப்பே அலாதியானது: அதிசயமான துங்கூட. இதனை வால்மீகி இராமாயணம், பாலகாண்டத்தில் பரக்கக் காணலாம். இவண் சுருக்கித் தருகிறோம். சரயு நதிக் கரையில் செய்யப்படவிருந்த அஸ்வமேத யாகத்தில் வெட்டிப் பலியிடப்படும் அஸ்வத்தைப் (குதிரையை) பொன்னூசியால் அதன் உடலை மூன்று பாகமாகக் கீறி அதன்படி அக்குதிரையைத் துண்டமாக்கி அதன் முதல், இடை, கடைப்பகுதிகளை முறையே கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகியோர்கள் ஓரிரவு முழுவதும் கட்டித் தழுவிப் படுத்திருந்த பிறகு ரிசியசிருங்கர் தசரதனுக்குக் கொடுத்த வாக்கின்படி திருமால் இராமராகவும், ஆதிசேடன் இலக்குவனுகவும், திருமகள் சீதையாகவும் அவனியில் அவதரித்தனர். ஆண்டவனுரின் அவதாரமாக விளங்கிய காரணத்தினுலல்லவா இராமபிரானுக்கு இத்தகைய வியத்தகு பிறப்பு நிலை கிட்டியது! ஆனுல், இராவணன் பிறப்பிலோ இத்தகைய இழிமுறைகள் யாதேனும் இருப்பதாகத் தெரியவில்லை. மூன்ருங்-கடற்கோளுக்குப் பின்னர் தமிழகத்தை ஆண்டுவந்த மாபெரும் தலைவர்கள் வழி வந்த வச்ரவாயுவின் மனைவி கேகசி என்பாள் இராவணன், கும்பகர்ணன், வீடணன் என்ற ஆண்மக்களையும் சூர்ப்பனகை என்ற பெண் மகவையும் பெற்றெடுத்தாள்.

இராவணன் தேவர்களையும் முனிவர்களையும் பலவாறு இம்சித்து, அவர்களின் யாகங்களையும் அழித்தான் என்று கூறப்படும் கூற்றில்,- குற்றச்சாட்டில் ஓருண்மைஇருக்கிறது. இராவணன் காலத்தில் ஆரியர்கள் தங்களை முனிவர்கள், தேவர்கள் என்று சொல்லிக் கொண்டு தென்னுடு போந்து காடுகளில் உறைந்து தென்னுட்டு ஆட்சி முறைக்கு எதிராக,—வடநாட்டு அரசனுக்கு மறைமுகமாகச் செய்திகளை அனுப்பிக்கொண்டும், வடநாட்டு ஆரியர்கள் தென்னுட்டில் எவ்வாறு மேலும் மேலும் குடியேறித் தங்கள் கொள்கைகளையெல்லாம் பரப்ப முடியுமோ அதற்கான வழிகளைச் செய்துகொண்டும் வாழ்ந்தார்கள். இராவணனுடைய ஆட்சிக்குட்பட்ட தண்டகாரண்யக் காட்டில் குடியேறினதுமல்லாமல் இராவணனது ஆட்சியை வீழ்த்த வழிகள் பலவற்றையும் கையாண்டது. மாபெரும் அரசதுரோகக் குற்றமல்லவா? எனவேதான் இராவணன் இவர்களை இவ்வாறு இம்சைப்படுத்தினுன். இதைப்பற்றி பேராசிரியர் பூர்ணலிங்கம் பிள்ளை என்பவர் 'இலங்கைப் பெருவேந்தன்' என்ற தன் நூலில் **"This Aryan missionary goes to the South India to preach their religion and these. Rishies built their Asramas wherever they pleased. While Rama was exiled he had met many of them in the Dandhaharunia forest"** என்று கூறியிருக்கிருர்கள்.

தங்களைப் பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டும், திராவிடப் பெருங்குடி மக்களைச் சிறுமைப்படுத்தவேண்டுமென்று மனதிலே எண்ணிய ஆரியர்கள் தங்களினத்தவரை பூசுரர், சுரர், தேவர் என்று பெருமையாகச் சொல்லியும், அசுரர், இராக்கதர், அரக்கரெனத் தென்னுட்டவரை இகழ்ந்தும் பேசியும் எழுதியும் வந்தார்கள். இதுதான் உண்மையே தவிர, கம்பன் கருதுவது போலக் கோரைப் பற்களும், கொடூரமான உருவமும் பெற்ற அழகற்ற மக்கள் தென்னிலங்கைவாசிகள் என்றும், கமலக் கண்களும், கவர்ச்சியான வதனமும், கட்டான உடலும் படைத்தவர் இராமனது இனத்தவரான ஆரியர் என்றும் எண்ணுவது, முடிவு செய்வது வடிகட்டின முட்டாள்தனமாகும். ஒரே நாட்டில் சமகாலத்தில் வாழும்படியான மக்கள் தொகுதியில் வடநாட்டார் மட்டும் அழகில் சிறந்தோராகவும் தென்னுட்டார் அழகற்ற அவலட்சண உருவத்தைப் பெற்றிருந்தனர் என்றும் கூறுவது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகுமே என்று சாதாரண அறிவுபடைத்தவன் கூடக் கூறிவிடுவான். இவ்வாறிருக்க என்ன ஏதுபற்றியோ நாகரிகத்தில், பண்பாட்டில் சிறப்புற்றிருந்த இலங்கைவாழ் மக்களையும், இராவணனையும் கம்பன் போன்ற ஒரு சில நடுநிலைமையற்றவர்கள் இழித்துக் கூறுகின்றனர். தென்னுட்டவரை அரக்கர், அசுரர் எனக் கூறப்படுவதெல்லாம் ஆரிய திராவிட வெறுப்புணர்ச்சியின் காரணமேயன்றிப் பிறிதொன்றும் இல்லை. சுரர் என்றல் தேவர் எனப் பொருள். பூசுரர் என்ருல் பூமியில் வாழும் தேவர்கள் என்று பொருள். அவர்களே ஆரியர்களாம். அசுரர் என்ருல் தேவரல்லாதவர்கள்; அவர்கள் திராவிடர்களாம். இந்தப் பொருளில்தான் இத்தகைய பூசுரர், அசுரர் என்ற சொற்கள் பயிலப்படுகின்றன. எனவே இராமாயணத்தில் கூறப்படுகின்ற தேவர்களையும் முனிவர்களையும் இராவணன் துன்பப்படுத்தினுன் என்ருல் அவர்கள் அவன் ஆட்சிக்கு அழிவு தேடும் நோக்கத்துடனே தென்னுட்டில் வாழ்ந்தனர் என்பதனுலேயாம்.

அந்தணர் செய்யும் வேள்விகளையெல்லாம் இராவணன் அழித்தான் என்பர். இச்செயலும் தவறுடைத்தல்ல. தங்களின் சுயநலத்திற்காக, — தங்களின் வரண்டு போன வாழ்வை வளப்படுத்திக் கொள்வதற்காக வேள்வியென்னும் பெயரில் தென்னுட்டந்தணர்கள் (ஆரியர்கள்) அளவற்ற பொருளை, எண்ணற்ற உயிர்களை நாசமாக்கினர். யாகமென்ருல் எத்தனை உயிர்களுக்கும் பொருள்களுக்கும் நாசம் நேரிடுகிறது என்பதைத் தசரதன் செய்த அஸ்வமேத யாகத்தை நோக்கினுல் உண்மை தெரியும். அவன் செய்த அஸ்வமேத யாகத்தில் தேவதைகளைப் பிரீதி செய்யச் சர்ப்பங்களும், பசுக்களும், ஆமைகளும், குதிரைகளும் பலியிடப்படுவதற்காகத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. அந்த யாகத்தில் 300க்கு மேற்பட்ட பசுக்களும், 100க்கு மேற்பட்ட ஆமை, குதிரைகளும், பாம்புகளும் பலியிடப்பட்டன. இவ்வளவு பலிகளுக்குப் பிறகு தசரதன் பிராமண ரிஷிகளுக்குத் தன்னளவுள்ள பொன்னும், மணியும், இரத்தினங்களும் வாரி வழங்கியதும் 10 கோடிப் பசுக்களையும் அவர்களுக்குத் தானமாகக் கொடுத்தான். இவைகளையெல்லாம் அவர்கள் பெற்று அவனை வாழ்த்திச் சென்ருர்களாம். இவைத நோக்குவார்க்கு வேள்வி என்ற வீண் செயலில் நாட்டுப் பொருள்களும், உழவர்க்கு உயிர்போன்ற கால்நடைகளும் எவ்வாறு பயனற்றுப் பாழாக்கப்பட்டன என்பது தெரியவரும். அதோடு மன்னனின் மடத்தனமும், மக்கள் நலத்திற்காக வாழாத பொறுப்பற்ற தன்மையும் வெளியாகின்றன. நாட்டு நலனில் கவனமில்லா நாசகார மன்னனுக்கல்லவா இத்தகைய பாழும் வேள்விகளிலெல்லாம் நாட்டம் செல்லும்? முற்றுந்துறந்த முனிவர்களென்று தங்களைக் கூறிக் கொள்ளும் இந்த ரிஷிகளுக்கு இத்தகைய பொன்னும் பொருளும் எதற்காக? எனவே, இவர்கள் உண்மையான துறவிகள் தானு? இல்லை. துறவிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு நாட்டாட்சிக்குத் துரோகம் இழைக்கும் இவர்களையும், இவர்களின் யாகங்களையும் இராவணன் அழித்தான் என்பதில் தவறென்ன உளது? தென்னுட்டில் இருந்துகொண்டு தன்னுட்டுப் பொருள் இவ்வாறு யாகமென்ற பெயரால் முனிவர், ரிஷிகளால் அழிக்கப்படுவதை இராவணன் எவ்வாறு பொறுப்பான்?

— 10-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்.
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 14-2-56 | இதழ் 35

தமிழகத்தில் 'அமிர்தசரஸ்'!

கடந்த மூன்று நாட்களாக காங்கிரஸ் கனவான்கள், சரித்திரப் புகழ் பெற்ற அமிர்தசரஸ் நகரத்தில் முகாமடித்திருக்கிறார்கள். கொந்தளிப்பை அடக்கிட நடவடிக்கை எடுக்கவும், கொள்கைகளை வலுப்படுத்த ஆக்கம் தேடவும்தான் அவர்கள் அந்தப் பட்டிணத்தில் 'அரசியல் திரு விழா' நடத்துவதாக வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தி விட்டுப் போயிருக்கிறார்கள். மதக்காவலர் குருநானக், மாவீரன் ரஞ்சித்சிங்- இவர்கள் வாழ்ந்து மறைந்த மண்ணிலே 'மகாநாடு' கூட்டியிருக்கிறார்கள் 'அணையும் ஜோதி'கள். தென்னாட்டின் எழுச்சி தியாகப் பரவிக் கொண்டு போகிறது; இந்த நேரத்தில் அமிர்தசரசில் மாநாடு நடத்துவதிலே மர்மம் இல்லாமலில்லை. புரட்சியின் வரலாற்றில் அமிர்தசரஸ் எவ்வளவுதான் புகழ்பெற்றுப் புனிதமடைந்திருந்தாலும், புராணிகர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை அமிர்தசரசிலுள்ள ஒரு தடாகத்தில் மூழ்கி எழுந்த ஒரு காகம் வெள்ளைக் காகமாக மாறிவிட்டதாகவும், மற்றொரு குஷ்டரோகி அதிலே குளித்த பிறகு நோய் நீங்கப்பெற்றவனாகி விட்டதாகவும் சொல்லுவார்கள் இதை நம்பித்தான் காங்கிரஸ்காரர்கள் அமிர்தசரசிலே மாநாடு கூட்டினார்களோ என்னவோ! வெள்ளைக்காகமாக மாற வேண்டியவர்களும், நோய் நீங்கப்பெற வேண்டியவர்களும் தானே காங்கிரசிலே இருக்கிறார்கள்! பார்ப்பனர்களின் பாதங்களைக் கழுவிப் பாவத்தைப் போக்கிக்கொள்ள எண்ணிடும் ராஜேந்திரரை நாட்டின் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் கட்சி அப்படி எண்ணிப் போயிருந்தாலும் ஆச்சரியமில்லை. ஆனால், அவர்கள் அதில் வெற்றிபெற்றார்களா என்றால், இல்லை என்று சொல்லுவதைக் காட்டிலும் மூக்கறுபட்டார்கள் என்று சொல்லிவிடலாம் வெள்ளைக்காகமாகவும் மாறவில்லை; வியாதியையும் போக்கிக்கொள்ளவில்லை. சேற்றை அள்ளிப் பூசிக்கொண்டு உடல் எரியுதே எரியுதே என்று கத்துகிறார்கள்.

காங்கிரசார் நடத்திய அமிர்தசரஸ் மாநாடு குடையின்கீழ் இருக்கிற மக்களின் பெருத்த எதிர்ப்பைச் சம்பாதித்துக்கொண்டது. நல்லவர், நாட்டோரின் உள்ளம் நிறைந்தவர் என்றுசாமான்யர்களால்கூடப் புகழப் பட்ட பண்டிதர், காங்கிரசின் அரசியல் சரிதத்தில் தனக்கென ஒரு புதிய இடத்தைத் தானாகத் தேடிக்கொண்டார். அடியார்க்கு அடியார்களும், 'ஐயகோ பண்டிதரே ஆவீரோ இப்படி' என்று இதயம் வெம்பிக் கசிந்துருகும் அளவுக்கு அமிர்தசரஸ் அவரைக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டது. எல்லைத் தீர்ப்பு விஷயத்தில் நேரு சொன்னதை மாற்ற முடியாது என்று அமிர்தசரஸ் முடிவெடுக்கச் சித்தமாக இருப்பதாக கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துவிட்டார்.

இந்த நேரத்தில் 1919-ல் இதே அமிர்தசரஸ் நகரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் நம் நினைவுக்கு வருகிறது. 1919-ல் நடைபெற்ற அந்தக் காங்கிரஸ் தான் காங்கிரஸ் கட்சியின் அரசியல் பிடிப்புக்கு வஜ்ஜிரமாக உதவியது என்பதை யாரும் மறுக்கமுடியாது. காந்தியார் அரசியல் முக்கியத்துவம் பெற்றதும், ஆங்கில ஏகாதிபத்யம் கொண்டுவந்த ரௌலட் சட்டத்தை முறியடிக்கக் களம் அமைத்ததும் அதே அமிர்தசரஸ்தான்.

ரௌலட் சட்டமா? யாரைக் கேட்டுக் கொணர்ந்தீர்கள்? சினந்தெழுந்தனர் காங்கிரஸ்காரர்கள். வெள்ளையர்கள், ஏகாதிபத்தியத்தின் அடிப்படையிலே ஆட்சியை அமைத்திருந்த காரணத்தால் காங்கிரசாரின் அந்த எதிர்ப்பை அவர்கள் காலடியிலே போட்டுத் துவைத்துவிட்டார்கள். காந்தியார் கொதிப்படைந்தார். ஹர்த்தால் நடத்தினார். ஆதிக்கம் செலுத்திவந்த ஆங்கிலேயர் தோட்டாக்களைப் பேசவைத்தனர். அமர்தசரஸ் குருதிக்காடாயிற்று. காங்கிரஸ் கட்சி பலத்ததோர் எதிர்க்கட்சியாக உருவெடுத்தது. அந்த நிலைமையை இப்போது தென்னாடு படம்பிடித்துக் காட்டுகிறது. எல்லைத் தீர்ப்பு அநீதி என்கிறோம், நாம் மட்டுமல்ல, நாட்டின் எதிர்க்கட்சிகள் அத்தனையும் இணைந்து! அன்றைய அந்நிய வெள்ளையரின் இடத்திலே இன்றைய 'நமது சர்க்கார்' அமர்ந்துகொண்டு ஆலவட்டம் வீசுகிறது. காந்தியார் ஹர்த்தால் நடத்தினார், நாமும் ஹர்த்தால் நடத்துகிறோம். அன்றைய 'முதல் அமிர்தசரஸ்'இன்று தமிழ் நாட்டில் நிழலாடி நிற்கிறது. முடிவு என்னாகும்? 'ஜாலியன் வாலாபாத்' நடந்தாலும் ஆச்சரியமில்லைதான்! ஐவரும் மற்றவரும் இதை உணராதவர்களல்ல!

புது வெள்ளம்......

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

பழிச் சொல்லுக்குத் தப்பமுடியாது. எல்லாக் குடிசைகளிலும் அடுப்புப் புகைகிறது அவள் வீட்டில் மட்டும் என்னவாம் என்பார்கள். அதிலிருந்து ஒரு கதை கட்டுவார்கள். பிறகு ஜாதிக்குப் புறம்பாகத் தள்ளி வைப்பார்கள். முடிவு, தற்கொலை தான்"—குறத்தி சொன்ன இந்தக் காரணம் செல்வத்தைத் திருப்திப் படுத்தியது. நாகரீகமற்ற வகுப்பாராக இருந்தாலும் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை அவர்கள் எவ்வாறு வகுத்துக் கொண்டார்கள் என்று செல்வம் எண்ணி எண்ணிப் பார்த்தாள். முடிவு காண முடியவில்லை. "தன்னொத்த வயதுடையாள்—தன் போன்ற எழிலுடையாள் தன்னந் தனியளாய்—ஏகாந்தப் பிரியையாய் ஏன் இருக்கிறாள்?" செல்வத்திற்குச் சந்தேகம் அரும்புவிட்டது. நீண்ட நாள் பழகிய தோழியைப் போலக் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து விட்டாள். குறத்தியும் செல்வத்திடம் இதயம் விட்டுப் பேசினாள். பிரிந்தவர் கூடியது போன்ற இன்ப உணர்ச்சி அவள் முகத்திலே பொங்கி வழிந்தது. நரிக் குறத்தி ஜாதி......நாகரீகமுள்ள கலெக்டர் மனைவி! இவர்களுக்கிடையே பாசம்! பிணைப்பு! பரிதாப உணர்ச்சி!

"உன் புருஷன் எங்கே?"

"என் புருஷனா?...எங்கோ போய் விட்டார்...இரண்டு ஆண்டுகளாகி விட்டன"-குறத்தி சொல்லும்போது அவள் முகத்திலே படர்ந்திருந்த ஜீவக்களை செத்துச் செத்துப்பிழைத்தது.

"இனி அவர் திரும்பியே வர மாட்டாரா?

"வர மாட்டார். செத்துப் போய் விட்டார்." குறத்தி சொன்னாள். விழிகளிலே நீர் கோர்த்து நின்றது.

"ஏன் மறு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதா?"

"ஏன் கூடாது! எனக்கு விருப்பமில்லை. அவரைப்போல் வேறொருவர் கிடைப்பார் என்றுநம்பிக்கையில்லை. அவர் குறவர் ஜாதிதான். அவரைக் காட்டிலும் அழகுள்ள வாலிபர்கள் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளத் துடிப்பதை நான் தினம்குடிசைகளில் பார்க்காமலில்லை. ஆனால் அவர் கிடைப்பாரா? அவரைப் போன்ற குணம் கொண்டவர் குறவர் குலத்தில் இனிப் பிறப்பாரா? நம்பிக்கைஇல்லை அம்மணி!என்னைப் பார்த்தது முதல், நீங்கள் ஏதோ குழப்பத்தில் ஆழ்ந்திருக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன். அதனால்தான் நான் யாரிடமும் நெருங்கிப் பேசுவதில்லை-பழகுவதும் கிடையாது. ஏன்? என்னைப் பற்றிச் சிலர் ஐயுறுகிறார்கள்! அனுதாபப் படுகிறார்கள்! அவர்களுக்கு என்னால் பதில்சொல்லமுடியவில்லை. காரணம், விடை எனக்கே தெரியவில்லை. நான் உண்மையிலேயே குறத்திதானா என்ற சந்தேகம் எனக்கே அடிக்கடி பிறப்பதுண்டு. எத்தனையோ முறை என் கணவரிடம் இதுபற்றிக் கேட்டிருக்கிறேன். அவர் கடைசிவரை சரியான பதில் சொல்லாமலே கண்களை மூடிவிட்டார். குறவர்கள் மத்தியில் தமிழைக் கொலை செய்து, மற்ற நேரங்களில் அதற்குப் பிராயச் சித்தமாக தமிழுக்கு முடிசூட்டி ஆராதிப்பேன். குறத்தி இப்படிப் பேசுகிறாளே என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கே அப்படி இருந்தால் எனக்கு எப்படி இருக்கும்? எண்ணிப் பாருங்கள்.

"நான் யார்? இது எனக்கேவிளங்காத புதிர். எனக்கு மட்டும் ஏன் தமிழ் நன்றாகப் பேச வருகிறது? என்னால் இதைப் புரிந்து கொள்ளவே முடிகிறதில்லை."

"மற்றக் குறத்திகள் உன்னிடம் எதுவுமே சொல்லுவது கிடையாதா?" செல்வம் குறுக்குக் கேள்வியைப் போட்டாள்.

"என்னிடமா? மற்ற குறத்திகளா? எப்படிச் சொல்லுவார்கள்?உண்மை எனக்குத் தெரிந்து விட்டால் நான் உயர்த்தியானவள் என இறுமாப்படைந்து விடுவேன் என எண்ண மாட்டார்களா? ஆனால் அடிக்கடி ஒரு வாக்கியத்தைச் சொல்லுகிறார்கள். நான் எப்போதாவது பழையதை நினைத்துக்கண்ணீர் சிந்துவதை அவர்கள் பார்த்துவிட்டால், 'உனக்கு வேணும். அப்போதே ஓடி யிருந்தால் இந்தத் தொல்லைகள் ஏன்?'—இப்படியே சொல்லுகிறார்கள் கிழட்டுக் குறத்தி முதல் அத்தனை பேரும். எப்போது ஓடி யிருக்கச் சொல்லுகிறார்கள்? அதுவும் எனக்குத் தெரியவில்லை."

"உன் புருஷன்!" மறுபடியும் ஊடே பாய்ந்தாள் செல்வம்.

"என் புருஷனா? அவர் கூட என் மீது அவ நம்பிக்கைதான் கொண்டிருந்தார். உண்மை எனக்குத் தெரிந்தால் நான் அவரை விட்டு ஓடி விடுவேன் என்று எண்ணியிருக்கக் கூடாதா? அவரைக் குறை சொல்லி இனி ஆகப் போவது என்ன?உத்தமர் "நீ பிச்சை எடுக்க வேண்டாம்" என்றார். பித்தல் பாவாடை கட்டக் கூடாது என்று தடுத்தார். பச்சை குத்திக்கொள்ளக் கூடாதென்று குறுக்கே நின்றார். இத்தனையையும் குறவர் ஜாதிக் கணவர்தான் செய்தார். நீங்கள் நம்ப மாட்டீர்கள். செத்துப் போனவரைப் பற்றி உங்களிடம் ஏன் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்?"-பேசிக் கொண்டிருக்கும் போதே அவள் கன்னக் கதுப்பைக் கண்ணீர் கறை படுத்திக் காய்ந்தது.

செல்வம் பிரமித்துப் போனாள். தமிழச்சியின் எண்ணிக்கையிலே ஒருத்தி குறைந்துவிட்டாள் என்பதற்காக அல்ல; குறவர் வர்க்கத்தில் சேர்க்கப்பட்டாலும் அவள் தமிழ்ப் பண்போடு வாழுகிறாளே என்பதற்காக. குறத்தியைக்தேற்ற வேண்டுமென்றுதான் செல்வம் விரும்பினாள். அவள் கேட்டால் தானே "இங்கேயே இரு. குறத்திக் கோலத்தைக் களை. குடும்பப் பெண்ணாக வாழலாம். புதிய கல்யாணம் செய்து வைக்கிறேன்" என்று செல்வம் கேட்டதும் அவள் முகம் எவ்வளவு விரைவாகச் சிவந்தது தெரியுமா?

"நான் சாகும்வரை குறத்தியாக வாழ்ந்தேதான் சாவேன். என்னை வளர்த்துவிட்ட அந்த சமுதாயத்திற்கு நான் மாசுகற்பிக்க விரும்பவில்லை. வாழ்வை உயர்த்திக்கொள்

— 9-ம் பக்கம் —

தீச்சுடர் நிதிக்காக

சென்னை

கோகலே மண்டபத்தில்

12—2—56

ஞாயிறு காலை 10 மணிக்கு

பேச்சாளர்கள்

இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி
டி. கே. சீனிவாசன்
சி. பி. சிற்றரசு

மனைவிக்கு... கணவர்க்கு...

4

— நாக முத்தையா —

அன்புக் கமலா,

செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு இனிச் செம்மையாய் நடப்பதாகச் சொல்லும் பட்சத்தில் நெஞ்சறியப் பாதகம் செய்தவனைக்கூட மன்னித்துவிடலாம் என்று மதவாதிகள் கூறுகிறார்கள். கருத்தறியக் காலித்தனம் செய்தவனுக்குக்கூட நாடாளும் முதல்வன் விரும்பினால், நல்லதென்று நம்பினால், கருணைகாட்டி, கடுமையான தண்டனையைத் தளர்த்திவிட முடியும் என்பதற்குச் சட்டங்கூட இடந்தருகிறது. ஆகவே, நான் உன்னை வேண்டிக்கொள்வதெல்லாம் ஒன்று. நீ மதவாதியாக மாறி என்னை மன்னித்துவிடு; இல்லையேல் நாடாளும் முதல்வனின் துணையாக மாறி நீ எனக்குத் தர விரும்புகிற தண்டனையைத் தளர்த்திக்கொள்ளு. அப்படியெல்லாம் செய்யவிரும்பாது உன் உள்ளம் ஏன் இப்படி இளகாத இரும்பாக இருக்கிறதோ தெரியவில்லை?

மூன்றாவது கடிதத்தில் முழுத்தாக்காகத் தாக்கி இருந்தாய். நான்காவது கடிதத்திலாவது சிறிது கருணை காட்டியிருப்பாய் என்றுதான் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். அப்பப்ப! ஏன் உனக்கு இவ்வளவு ஆத்திரம் என்பதுதான் புரியவில்லை?

'நாவினிக்கப் பேசி நாடுகடந்து சென்ற நீங்கள் கேவலம் வேசியின் வலையில் எப்படி வீழ்ந்தீர்கள்?'--என்று கேட்கிறாய். நல்ல கேள்வி? நான் பதில் சொல்லக் கடமைப்பட்டவனுங்கூட!

மனிதன் நல்லவனாக இருப்பதற்குக் காரணம் பெரும்பாலும் சூழ்நிலைகளின் சோதனைக்கு ஆளாகாமல் இருப்பதுதான். சூழ்நிலைகள் தொந்தரவு செய்தும் தன்னிலையில் மாறுபாடு கொள்ளாமல் இருப்பவரைத்தான் மனிதருள் மாணிக்கம் என்று புகழ்கிறார்கள். அத்தகைய மாணிக்கங்கள் நாட்டுக்கு நாலு அல்லது ஐந்துதான் இருக்கமுடியும்.

நான் உன்னைப் பிரிந்து வந்தேன். உன்னிடம் கண்ட ருசியைக் காண இயலாமல் தவித்த எனக்கு எதிலும் பற்றுதலே இல்லை. புத்தகங்களை எடுத்துப் படித்தால் அதிலே காதலைப் பற்றியே எழுத்தாளர்கள் கதை கதையாக எழுதி இருந்தார்கள். ஓவியங்களைப் பார்க்கலாம் என்றால் அதிலேயும் லீலா விநோதங்கள் தாம். சினிமாவுக்குப் போகலாம் என்றாலோ அங்கேயும் இதே சிருங்காரக் காட்சிகளே.

கோவிலுக்குச் சென்றால் அங்கே கோபியரோடு கிருஷ்ணன் செய்த லீலை; பார்வதியைப் பரமசிவன் அணைத்தபடி ஆனந்த நடனமாடும் காட்சி. அப்பப்பா கேட்கவா வேண்டும்? என் நரம்புகள் முறுக்கேறி நின்றன. ரத்தம் கொதித்தது. என் செய்வேன்!

கோவிலிலேதான் முதல் முதலாக அந்தக் கோமளவல்லியைக் கண்டேன். கொள்ளை கொடுத்தேன் உள்ளத்தை. இறுதியில் பணத்தைப் பறிகொடுத்துப் பரதவிக்கிறேன். இந்த நிலையில் நீயோ இரக்கமற்ற சிந்தையோடு என்னைப் பழித்துத் தூற்றுகிறாய்?

அனிச்ச மலரே உன்னை வருத்தி வாட்டுகிறது என்கின்றபோது துன்பச் சுமை உன்னை என்னென்னசெய்ததோ? இதை உணர்கிறபோது என்னை யாரோ 'புத்தி இல்லாதவன்' என்று கேலி செய்வது போல உணர்கிறேன். கேலியா அது? முழுக்க முழுக்க உண்மை ஆயிற்றே!

'நான் இனி, உங்கட்கு விஷம். அந்தத் தேவடியாள்தான் அக்கார வடிசல்-இனிப்புப் பதார்த்தம்!'--என்று இரண்டு வரி எழுதி இருக்கிறாய். அவ்வரிகள் அரிவாளாக மாறி என்னை அறுத்தறுத்து எடுக்கின்றன. யார் விஷம்? யார் அக்கார வடிசில்?

பெருங்குடியில் பிறந்தும், பெண்வலையில் வீழ்ந்து பொருளை எல்லாம் பறிகொடுத்துப் பெரசுப்பற்று பரிதாபத்திற்கு உரியவனாக நிற்கிறானே அப்பாவிப் பேர்வழி, அவன்தான் விஷமாகக் காட்சி அளிக்கிறான் வேசிகளுக்கு.

செக்காட்டி எண்ணெய் விற்கும் சிறுகுடியில் பிறந்தும் பொருள் ஈட்டிச் சேர்த்து வளத்தோடு வாழ்கிறானே அவன்தான் அக்காரவடிசலாகக் காட்சி தருகிறான். அக்கிரமக்கார வேசிகளுக்கு நீ எழுதிய விஷம்-அக்காரவடிசல் என்ற சொற்கள் எனக்கு மேலே காணும் கருத்துள்ள நாலடியாரைத்தான் நினைவூட்டின. உனக்கும் அப்பாடலைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதோ பாடல்:

> **ஆணம்இல் நெஞ்சத்து அணிநீலக் கண்ணார்க்குக்**
> **காணம்இல் லாதார் கடுஅனையர்-காணவே**
> **செக்குஊர்ந்து கொண்டாரும் செய்த பொருள்உடையார்**
> **அக்காரம் அன்னார் அவர்க்கு!**

(ஆணம் என்பது அன்பு; காணம் என்பது செல்வம்; கடு என்பது விஷம்; அக்காரம் என்பது அக்கார வடிசில்)

இத்தகைய இழிநிலை மாதருடன் வாழ்ந்தமை குறித்துப் பெரிதும் வருந்துகிறேன். இனி இத்தகைய மாபெரும் பாதகம் செய்யவேமாட்டேன். என்னை நம்பு. நல்விளக்கே விரைவில் வந்து சேர்கிறேன்.

அன்புள்ள,

மாவண்ணன்!

— இரா. சண்முகம் —

அன்புள்ள அத்தான்,

தன்னை வெறுத்துப் பொன்னை அளித்து மாதவியின் மயக்கு விழிகட்கு இரையான கோவலன் மீண்டும் தன்னையே நாடிவரும் நிலை ஏற்பட்டது கண்ட கன்னித்தமிழ்க் கண்ணகியைப் போலத்தான் நானும், தூசுநிகர் இன்பத்திற்காக ஆசை கொண்டு காசையெல்லாம் வீசி மாசு நிறை வேசையிடத்தில் பேசிக் களிப்புற்ற தாங்கள் காசற்றுத் தோல்வி கண்டபின் தங்களின் இதயத்துடிப்பிலிருந்து எழுந்த இன்ப எழுத்துக்களைக் கண்டு கரைகாணாக் களிப்புக்கடலில் மூழ்கினேன்.

'குற்றவாளியைக் கூண்டிலே நிறுத்திக் குற்றப் பத்திரிகை வாசிக்கும் சர்க்கார் தரப்பு வழக்கறிஞரைப்போல வரிவரியாகக் குற்றஞ்சாட்டி எழுதி இருக்கிறாய்' என்று தளர்ந்த சொற்களால் வரைந்துள்ளீர்கள். தாங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னும் அவ்வாறு தங்களைக் காரசாரமாகக் கண்டிக்க நான் கொஞ்சமும் விரும்பவில்லைதான்.

ஆனால், என் மனம் அன்று தாங்கள், பண்ணார் மொழியே! தண்ணார் நிலவே! ஒண்ணார் விழியே! கண்ணார் மணியே! உண்ணா அமுதே! எண்ணாப் பொருளே! விண்டுவாழ் பிடியே! வண்டுசூழ் குழலே! பண்டைநற் றமிழே! உன்னைவிட்டு நான் ஒரு கணம் பிரிய நேரினும் உயிர் வாழேன். ஈது உண்மையினும் உண்மையே, என்றெல்லாம் தேன்பொழியும் செந்தமிழால் வான்பொழியும் மாரியைப்போல் பெய்ததை நினைவிற்குக் கொண்டுவந்தது. அதன் விளைவாகத்தான் நான் அக்கடிதத்தை அவ்வாறு தீட்ட விழைந்தேன்.

எவ்வறத்தினும் இல்லறமே சிறந்ததென ஆன்றோர் கூறியுள்ளயாவும் தங்கட்குத் தெரியாததல்ல. வாழ்க்கையில் பெண்தான் கற்புநிலை தவறாது வாழவேண்டும். ஆண்கள் தம்மனம்போல் நடக்கலாம் என்ற எண்ணத்தோடு இனியும் எண்ணாதீர்கள். கற்புநிலை இருவருக்கும் வேண்டும் இதை 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடி நீங்காப் புகழ்கொண்ட பாரதியே கூறுகின்றான்:

> **கற்புநிலை என்று சொல்ல வந்தார்; இரு**
> **கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.**

நீங்கள் திருந்தியதாகத் தீட்டிய பின்னும் இதையெல்லாம் நான் எடுத்துக் காட்டுவது சரியற்றதுதான். எனினும் 'மயில்போல் மனைவி இருந்தாலும், மந்திபோல ஒரு வைப்பாட்டி வேண்டும்' என்று மீண்டும் தாங்கள் விரும்பக்கூடுமோ என்ற ஐயப்பாடு என் மனதில் எழுகிறது. அவனி ஐம்பத்தியாறு தேசத்திற்கும் ஏகச் சக்கரவர்த்தியாக இருந்தாலுங்கூட வேசிகளின் ஆசையூட்டும் விழிகளில் மயங்கத்தானே செய்வர்.

சென்றதைப் பற்றி மீண்டும் மீண்டும் நினைவூட்டித் தங்கட்குத் தொல்லை தர நான் விரும்பவில்லை. நமக்கு மாகவிஞன் பாரதியே இதைப்பற்றிச் சொல்லிவிட்டான்,

சென்றதினி மீளாது மூடரே என்று.

ஆம்; சென்றதை மறந்துவிட்டு இன்பமாக வாழ்வோம். இக்கணமே விரைந்து ஓடிவாருங்கள் அத்தான். தேன் செறிந்த முகில்கள் நம் வாழ்க்கை வானில் விளையாட வருகிறது. என் மனக்கண்ணிற்குத் தெளிவாகத் தெரிகிறது செந்தமிழரே!

ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்து அறம்பிழையாது இந்நிலத்தை ஆண்ட மறம்செறிந்த இன்தமிழனும் இராவணன் மரபில் தோன்றிய மாவண்ணரே! எத்தனைநாள் இத்தரையில் தாங்களின்றி நான் தனியே உயிர்வாழ வேண்டும்?

நீங்கள் தான் நளவெண்பாவை நன்கு கற்றவராயிற்றே. நளனை ஒரு கணம் பார்த்த தமயந்தியே காமநோயால் வருந்தியதாகப் புலவர் புகழேந்தி கூறுகிறாரல்லவா?

> **உள்ளம்போய் நான்போய் உரைபோய் வரிநெடுங்கண்**
> **வெள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல்-பிள்ளைமீன்**
> **புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி**
> **உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்.**

நளனைக் கண்ணால் கண்ட தமயந்திக்கே இந்நிலை என்றால், என்நிலை...!

காதலிக்கு ஏற்படும் பிரிவாற்றாமையை நான் பைந்தமிழ்ப் பனுவல்களில் படித்தபோதெல்லாம் கனிதமிழ்க் கவிஞர்கள் கஞ்சியில்லாத போது கருணை செய்யக் கண்டபடி கழறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று நான் கேலியாக அன்று நினைத்து மகிழ்ந்தது இன்று தவறு என்பதை நன்றாக உணர்ந்துகொண்டேன்.

தாங்கள் இதனையெல்லாம் ஏற்று என்னை மகிழ்விக்க உடனே கடிதில் வருவீர்களென நம்புகின்றேன். பிரிந்து சென்ற காதலன் வருகை காதலிக்குப் பருவகால் மழைபோன்ற தாமே! இதை வள்ளுவன் கூறாது விடவில்லை. அவனுக்கு என் ஆழ்ந்த நன்றி! 'பத்தரை மாற்றுத் தங்கமே பதறாதே இதோ வந்து சேர்கிறேன்' என்று தாங்கள் எழுதிய நற்சொற்களைக் காப்பாற்றுங்கள்.

> **வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு**
> **வீழ்வார் அளிக்கு மளி.**

ஆம்; இதனை நினைவில் கொண்டு ஓடோடி வாருங்கள். என் மனம் மகிழச் செய்யுங்கள் அத்தான்!

அன்புள்ள,

கமலா.

அரசியல் நாட்குறிப்பு

★ தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், பிப். 20ல் பொதுவேலை நிறுத்தத்துக்கான அமைதியான நடவடிக்கைகள்பற்றி எடுத்துக் கூற பிப். 12, 13, 14, 15, ஆகிய நாட்களில் தமிழகத்தில் சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்திருக்கிறூர்கள்.

★ 12-ந் தேதி காஞ்சீபுரம் பொதுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு கிளம்பி வாலாஜாபாத், செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம் வழியாகத் தூத்துக்குடி வரை செல்வார்.

★ சொற்செல்வர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் பிப். 9-ந் தேதியிலிருந்து 19-ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்கிறூர். மன்னார்குடி, திருவாரூர், தஞ்சை, மதுரை, பாலக்காடு, பாகூர், சென்னை, போடிநாயக்கனூர், கும்பகோணம் முதலிய ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவார்.

★ 5-2-56 அன்று திருச்சிதேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசிய பெரியார் அவர்கள், "இஷ்டப் பட்டால் திராவிடர் கழக மெம்பர்கள் பிப்ரவரி 20 ந் தேதி சர்வகட்சி வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளலாம்" என்று குறிப்பிட்டார்கள்.

★ 7-2-56 அன்று மலாய் முதன் மந்திரி பெங்கு அப்துல்ரஹ்மான், மலேயாவுக்கு 1957 ஆகஸ்ட் 19-ந் தேதியன்று காமன்வெல்த்துக்குள் அடங்கிய பூரண சுதந்தரம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

★ பிப்ரவரி 8-ந் தேதி அன்று, தட்சிணப் பிரதேசம் அமைக்கும் திட்டம் வேண்டாம் என்று கம்யூனிஸ்டு தலைவர் ஏ. கே. கோபாலன் பாண்டிச்சேரியில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டில் பேசினார். இந்தத் திட்டம் ஜனநாயகத்தைக் கொலை செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

★ அம்பத்தூர் டி. ஐ சைக்கிள் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 610 பேர் 12-1-56 முதல் வேலை நிறுத்தம் செய்துவருகிறூர்கள்.

★ ★ ★

டி. ஐ. சைக்கிள் பாக்டரி எம்ப்ளாயீஸ் யூனியன் வேலை நிறுத்தம்

சங்கத்தலைவர் ஜி. எம். மதுரையார் அறிக்கை

அம்பத்தூர் டி ஐ சைக்கிள் பாக்டரி முதலாளியின் கொடூரச்செய்கையால் 12-1-56 வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து இன்று வரை (10-2-56) கீழே கண்ட கோரிக்கைகளுக்காக சாத்வீகமான முறையில் **வேலைநிறுத்தம்** நடைபெற்று வருகிறது.

1. இரவுகால அலவன்ஸ்.
2. 1954-55 வருடத்திற்கு முதலாளியின் லாபம் 30 லட்சத்தில் போனஸ் கேட்பது 3 இலட்சம்.
3. 26 நாட்களுக்கும் பஞ்சப்படி.
4. வருடாந்தர உயர்வு.
5. 1-9-55—2-9-55ல் பிடிக்கப்பட்ட சம்பளம்.
6. முன்னால் கொடுக்கப்பட்ட உற்பத்தி போனஸ் ஒப்பந்தப் படி கொடுத்தல்.
7. தோட்டத் தொழிலாளர்க்கும் புதிதாகச் சேர்க்கப்படும் தொழிலாளிக்கும் பஞ்சப்படி கொடுத்தல்.

மேற் கண்ட கோரிக்கை சம்பந்தமாக 29-11-55ல் லேபர் கமிஷனர் முன்னிலையில் சமரசம் ஏற்பட இருந்தது. அது முறிந்துவிடவே ஏற்கனவே மானேஜ்மெண்டாரும் தொழிற்சங்கமும் செயதிருந்த ஒப்பந்தத்தை மீறி 12-1-56ல் திடீரென்று A பாக்டரியில் நடைமுறையில் இல்லாத புதுமுறை பீஸ்ரேட்டை பலாத்கார முறையில் புகுத்தினர். இதை ஆட்சேபித்த தொழிற்சங்க முக்கிய நிர்வாகஸ்தர் 7 பேர்களை சஸ்பெண்ட் செய்து வெளியே துரத்தினர்.

இதை எதிர்த்து தொழிலாளர்கள் 600 பேர்களும் 12-1-56 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் அமைதியான முறையில் **வேலை நிறுத்தம்** செய்து வருகின்றனர். சாத்வீகமான முறையில் நடைபெறுகின்ற இந்த வேலைநிறுத்தத்தை சிதறடிக்க மானேஜ்மெண்டார் தொழிலாளர்கள் அனைவரையும் டிஸ்மிஸ் செய்து அவர்களது ஊதியத்தை மணியார்டர் மூலம அனுப்பிவைத்தனர். இந்தத தொழிலாளர்கள் அனைவரும் வாங்க மறுததுவிட்டனர். இதிலும் தோல்வி அடைநத நிர்வாகஸ்தர்கள் செய்தித்தாள்களில் வேலைக்கு ஆள் தேவை என்று விளம்பரம் செய்து குழப்பத்தை விளைவித்தனர்.

இக்கோரச் செய்கையை எதிர்த்து தொழிற்சங்க தொண்டர்களால் அணி அணியாக அஹிம்சாமுறையில் சாத்வீக சத்யாக்கிரகம் 2-2-56 லிருந்து நடைபெற்று வருகிறது. இதையும் முறியடிகக ரௌடி ஆட்களைத்திரட்டி தொண்டர்களை கேவலமான முறையில் பேசியும் சங்க வாலண்டியர்களை பலாத்கார முறையில் அடித்தும் விட்டனர். இதற்கு ஒரு சில போலீஸ் அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனர்.

இவ்வளவு அநீதிகளும் நிர்வாகஸ்தர்கள் இழைத்த பிறகு 9-2-56 'சுதேசமித்திரன்' பேப்பரில் வேலைப் பளுவை புகுத்தவில்லையென்றும் பெருவாரியான பகுதிகளில் பீஸ் ஒர்க் செயதிருப்பதாகவும் 3 பேர் கொண்ட சிறிய பகுதியில் பீஸ் ஒர்க் புகுத்தினதாகவும் தொழிலாளாகள் முன்னேற்பாடுடன் வேலை நிறுத்தம் செய்ததாகவும் நிர்வாகிகள் கூறியிருப்பதாக எழுதியிருப்பது அபாண்டமான பொய். திடீரென்று பீஸ்ரேட் முறையைப் புகுத்தினதால்தான் வேலைநிறுத்தம் ஏற்பட்டதென்று இந்த அறிக்கையின் மூலம் தெரிவிக்கின்றோம்.

இத்துடன் பொதுமக்களும் வியாபாரிகளும் தினசரி 600 தொழிலாளிகளுக்கும் குளிர்ந்த பானமும் பகல் உணவும் அளித்து எங்கள் போராட்டத்துக்கு ஊக்கமளிக்கின்றனர். அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகவே இப் புனிதமான எங்கள் போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய பொதுமக்களும் ஏனைய தொழிலாளர்களும் ஒத்துழைத்துப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தவும் நம் தேசிய சர்க்காரை இதற்கு உடனே சமரசம் செய்து வைக்க ஆவன செய்யவும் வேண்டுகிறோம்.

இப்படிக்கு
ஜி. எம். மதுரையார்,
சங்கத்தலைவர், அம்பத்தூர்.

இந்தக் கவிதையை எழுதியவர்கள் இன்றைய கவிஞர்களல்லர். பெயரும் காலமும் தெரிந்துகொள்ள முடியாத கவிஞர்கள்.

"தாலாட்டு" என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டிருக்கிறது இப்பகுதி.

எழுத்துக் கவிஞர்கள்

கொவ்வை இதழ்மகனே-என் குவிந்தநவ ரத்தினமே!
கட்டிப் பசும்பொன்னே-என் கண்மணியே நீயுறங்காய்!

மாணிக்கக் கால்நாட்டி-மகனே வச்சிரத்தால் வடம்பூட்டி
ஆணிப்பொன் தொட்டிலிலே-என் அருமருந்தே கண்வளராய்!

பச்சை இலுப்பைவெட்டிப் பால்வடியத் தொட்டில்கட்டித்
தொட்டிலும் பொன்னாலே தொடுகயிறும் முத்தாலே!

புன்னை ஒரு மரந்தான்-தம்பி புன்னை பூக்கும்பூ ஆயிரந்தான்.
அன்னமே அருமருந்தே ஆருயிரே கண்வளராய்!

பச்சைப் பசுங்கிளியே-தம்பி பறக்குதடா தினைக்குருவி!
பகலெல்லாம் எங்கிருந்தாய்?-என் பாலகனே கண்வளராய்!

காட்டுக் கிளிகளெல்லாம்-தம்பிக்குக் காட்டிலேயோ வாழ்கிறது
வீட்டில் பிறந்த கண்ணே மேதினியில் கண்ணுறங்காய்!

வெள்ளி விளக்கெரியத்-தம்பிக்கு வெண்கலத்தால் தேர்ஓட
புள்ளிமயில் போலநீ புலந்திரனே கண்ணுறங்காய்!

காய்ச்சிக் கறந்துசெல்வி-மகனே காடேறி மேய்ந்தாளாம்
விசிறுள் செல்வி-மகனே விரித்தாள் சடைமகுடம்

கரும்பே ரசமே கனியமுதே என் மகனே!
விருப்பாய் நீகிடந்து விளையாடி உறங்காயோ

வண்ணச்சிற் றுடையுண்டு-மகனுர்க்கு மார்புக்குச் சட்டையுண்டு
இன்னம் உனக்கென்ன குறையுண்டு என் மகனே கண்வளராய்!

ஆரடித்து நீயழுதாய்?-என்மகனே அழுதகண்ணில் நீர்ததும்ப,
நீயுரைத்தால் நான்கேட்பேன் நீலமணியே உறங்காய்!

அத்தை அடித்தாளோ-உன்னை ஆமணக்கந் தண்டாலே,
சற்று மனம்பொறுத்து-என் மகனே நீ கண்ணுறங்காய்!

பாட்டி அடித்தாளோ-உனக்குப் பாலூட்டும் கையாலே,
கூப்பிட்டு நான் கேட்பேன்-என் குஞ்சரமே கண்வளராய்!

மாமி அடித்தாளோ-மகனுரை மைதீட்டும் கையாலே,
சாமி! மனம்பொறுத்துத் தம்பிநீ கண்ணுறங்காய்!

தமையன் அடித்தானோ-மகனுரைத் தயிருட்டும் கையாலே,
மனம் நொந்து நோகாமல் மன்னவனே கண்வளராய்!

ஆச்சி அடித்தாளோ-உன்னை ஆமணக்கந் தண்டாலே,
பேச்சி அடித்தாளோ பிரண்டங் கொழுந்தாலே?

பொழுதால் அடிஅளந்து-மகனே புத்தகத்தால் நான்பார்த்து
நித்தம் உன்னை வளர்த்தேன் நிமலனே கண்வளராய்!

சங்கை புலித்தோலும்-தம்பிக்குச் சன்னபின்ன மாலைகளும்
மாலைநல்ல மாலையடா-தம்பிக்கு மல்லியப்பூத் தோள்மாலை!

மின்னிச்சோ வானமது-தம்பி முழங்கிச்சோ ஆழியிலே
ஆழிதயிராகத்-தம்பிக்கு ஆண்பனைகள் மத்தாக

பூரும் பூணத்-தம்பிக்குப் புதன்கிழமை நல்லதினம்
காப்புக் கலகலென்ன கைவளையல் ஓசையிட

கன்றுமான் கன்றே கவரிமான் ஈன்றகன்றே
வெள்ளி வெளிச்சத்திலே-தம்பிநீ விளையாடி ஓடிவா!

'நீட்டோலை வாசிக்கத்-தம்பிக்கு நெடுந்தருத்து வெள்ளோலை
வெள்ளோலை வாசிக்கத்-தம்பி வேளாளர் பிள்ளையலோ!

வண்டுப் பனையோலை-தம்பிக்கு வாந்தெழுத நல்லோலை
கன்றுப் பனையோலை-தம்பிக்குக் கணக்கெழுத நல்லோலை!

முத்தோ பவழமது-தம்பிக்கு முன்கைக்குப் பொன்காப்பு!
மந்தாரம் போடுதங்கே மழைக்காற்று வீசுதிங்கே!

வாடாத பூவே தம்பிக்கு வளமான மாலையடா?
தேடாத பொன்னே- தம்பிக்குத் தெவிட்டாத பாலமுதே!

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
ஆரடித்து நீ அழுதாய் அஞ்சனக்கண் மைகரைய?
மையும் கரைந்து மதிமுகம் வாடினதால்
செய்யுமொரு காரியங்கள் தோணுமோ சித்தடியே!

சித்தடியே சித்தடியே நான் செய்ததவம் நீகேளாய்!
சித்தடியே நீ பிறக்கச் செய்ததவம் மெத்தவுண்டு
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
முத்தே பவழமே முக்கனியே சர்க்கரையே

கொத்து மருக்கொழுந்தே கோமளமே கண்வளராய்!
கண்ணே யுறங்குறங்கு கண்மணியே நீயுறங்கு
பொன்னே யுறங்குறங்கு பூமரத்து வண்டுறங்கு
நித்திரைசெய் நித்திரைசெய் நித்திலப்பூந் தொட்டிலிலே!

தோழியின் தயவாலே.....

"எழில்"

அழகு கொழிக்கும் தெருக்கள்.

பாண்டிமா நகரின் பாதைகள் வர்ணிக்கும் வகையின் அன்று மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நிறைந்துள்ள தெருக்கள். எழிற் சித்திரங்களான ஏந்திழைகளும், செவிலித் தாய்மார்களும், இளைஞர்களும் நிலா மாடங்களில் இருந்து - பாண்டி நாட்டுப் பெருவழுதியின் பவனியைப் பார்க்கின்றனர்.

காவலன் மீனக்கொடி பறக்க உலா வருகிருன். காண்பவரெல்லாம் தலைதாழ்த்தி வணக்கம் செலுத்துகின்றனர். மாடங்களிலிருந்து மலர்கள் பறந்து வந்து மன்னனைத் தழுவுகின்றன. வளங்கொழிக்கும் தென்பாண்டி வேந்தன் உவகையுடன் உலா வருகிருன். எழிலின் பொழில் எங்கும் தங்கியிருக்கிறது. சிரிப்பொலி வரிப்புலியென எங்கும் திரிகிறது.

குடிகளின் குதூகலமே காவலனின் களிப்பாம். தென்னவர் மன்னன் - தன் தேசத்து மக்கள் மங்கா உவகையுடன் வாழ்வதைக் கண்டு வலம் வருகிருன்! நீண்டோங்கிய கோபுரம்! உயர்ந்த கோபுரத்தின் உச்சியில் உள்ள சாளரம் திறந்திருக்கிறது. பிறைச் சந்திரனை வம்புக்கிழுக்கும் நெற்றியுடையாள் ஒருத்தி, விழிகளில் ஒளிபாய்ச்சி மன்னனின் பவனியைப் பார்க்கிருள். துள்ளும் விழிகள் துடிப்பால் தெளிகின்றன. தேன் தளும்பும் இதழ்களில் புன்முறுவல் புரள்கிறது. மாங்கனிக் கன்னங்கள் சிவக்கின்றன. மேனி உணர்ச்சி கானத்தால் சிலிர்க்கிறது.

பாண்டியன் மீதுள்ள காதல் தீ அவளைச் சுட்டெரிக்கிறது. மோகலாகிரியில் மூழ்கிப்போன அம்மோகினி தாபத்தீயில் வதைகிருள். கைகளிலிருந்த கைவளைகள் நழுவி விழுகின்றன. தோள் வளையங்கள்கூட - தோள்கள் மென்மையடைவதால் நெகிழ்ந்து வீழ்கின்றன! கண்கள் கூடச் சுழலுகின்றன! மோக சாகத்தால் நினைவுகள்கூட வரண்டுவிடும் போலிருக்கிறது!

உலாவரும் மன்னவனைக் கண்ட மங்கை காதல் கொண்டாள்! களிபேருவகை எய்திருள்! கைவளையும் தோள்வளையும் நெகிழ நிற்கிருள்! எல்லாம் சரி! அவள் இதற்குக் காரணம் சொல்கிருள்! அதில்தான் அவளின் அறிவுத்திறன் சுடர் தெளிக்கிறது! தன் தோழியைப் பார்க்கிருள். அவளோ தன் தலைவியின் நிலையைக் கண்டு பரிதாபப் படுகிருள். அதற்கு அந்தத் தலைவி, "அடி தோழி! காவலனும் கள்வனும் ஒருவனுகவே இருந்தால் நான் என் செய்வேன்?" என்கிருள். தோழியோ தலைவியின் கருத்தைப் புரிந்துகொண்டு சிரிக்கிருள்.

காவலனைக் கண்ட காதலால் - அவள் மேனி மெலிந்தது! கைவளையும் தோள்வளையும் நெகிழ்ந்து நழுவியதை - பாண்டிய மன்னன் திருடியதாகச் சொல்கிருள்! அதற்கு அர்த்தம் தன் உள்ளத்தையே கொள்ளை கொண்டுவிட்டானே என்பதுதான்! 'அந்தக் கள்வனும் காவலனும் அவனுகவே இருக்கிருனே! என் குறை எப்படித் தீரும்?' அவள் கேட்பதில் அர்த்தம் இருக்கிறதா? இல்லையா? இதல்லவோ காதல் தத்துவம், மகத்துவம் எல்லாம்! இப்படியல்லவா இருக்க வேண்டும் காதலைப் பற்றிய காவியங்கள் - ஓவியங்கள் எல்லாம்! காதல் எனும் பெயரிலே காமபோதையைத் தரும் கவிதைகளையா கவிஞர்கள் எழுதிக் குவிப்பது?

முத்தொள்ளாயிரம் செய்த பாவலன் யாரோ? பெயரே தெரியவில்லை. அந்தப் புலவன் அழகும் ரம்மியமும் ததும்ப - கன்னியொருத்தியின் காதல் நிலையைக் கவிதையாக்கியுள்ளான்! பெண்மையின் உள்ளத்தில் காதல் புகுந்து துடிக்கும்! அதற்காக அவள் தன் பெண்தன்மையை, பெண்ணென்ற நிலையை இழந்துவிடமாட்டாள்! தமிழ்ப் பெண்ணின் தனிப்பெரும் பண்பு - இப்புலவனின் பாடல்! இதோ அப்பாடல்...!

"வழுவிலெம் வீதியுள்
மாறன் வருங்கால்
தொழுதேனைத் தோள்நலமும்
கொண்டான்—இமிழ்திரைக்
கார்க்கடற் கொற்கையார்
காவலனும் தானேயால்
யார்க்(கு) இடுகோ பூசல் இனி."

★

நவரத்னமாலை என்னும் நங்கை நல்லாள் பிரிவுத்துயரால் வருந்துகிருள். அவள் காதலனுன கூளப்ப நாயக்கன்மேல் அவள் கொண்டுள்ள காதல் அவளைப் படாத பாடு படுத்துகிறது! அவளின் தாய்-தன் மகளின் நிலைகண்டு முதலில் மயங்குகிருள். தோழியர்களின் மூலம் செய்தி அறிந்ததும் என்ன சொல்கிருள் கேளுங்கள்!

குங்குமமும் குளிர்சாந்தும் பனிநீரும் - வாடும் மனையாள்போலக் காய்கிறது, நவரத்ன மாலைக்கு! இதையெல்லாம் கண்ட அவள் அன்னைக்கு அகங்காரமும் அனுதாபமும் எழுகிறது. தன் மகளின் எழில் அவளுக்குத் தெரியும். மன்னவனின் அழகும் அவள் அறிந்ததுதான்! அதனுல் அவள் என்ன சொல்கிருள் கேளுங்கள்!

"மன்ன னழகுக்
கென் மகளே மனையாளாம்
கன்னி யழகுக்கும்
அந்தக் காவலனே காதலனும்."

மிக எளிமையான அடிகள். ஆனுல் அதில் அந்தத் தாயின் பூரிப்பும் பெருமையும் எங்ஙனம் ததும்புகிறது பாருங்கள்! மன்னன் அழகுக்கு அவள் மகளே மனைவியாம்! அந்தக் கன்னியெழிலுக்கு அந்தக் காவலனே கணவனும்!

இங்ஙனம் பெருமைப்பட்ட அன்னை பிறகு என்ன சொல்கிருள்? கேள்விக்குறியைக் கிளப்புகிருள்! அதற்குக் காரணம் - அவளின மகள் பிரிவுத்துயரால் வாடுவதேயாகும்! மகளின துயர் தாங்காத தாய் - மன்னவனையும் மகளையுமே கண்டிக்கிருள! ஆனுல், அந்தக் கண்டிப்பில் சினமில்லை - செல்லம்' சுழல்கிறது!

"எம்மை யறி யாமல் இவள்
எப்படித்தான் கைகலந்தாள்
நம்மை யறி யாமல் அந்த நாயகன்
எவ்வாற ணைந்தான்?"

எளிமையும் நயமும் உறவாடும் இந்த வரிகள் - தாய்மையின் உண்மை நிலையைத் தெரிவிக்கின்றன! கேள்விக்குறி சுழியிட்ட அந்த அன்னையின் மனதில் - ஆயாசமும் சுழல்கிறது!

முத்தொள்ளாயிரத்தில் - பாண்டியன்மீது காதல்கொண்ட பெண்ணொருத்தி - காவலனைக் கள்ளனென்றும், அவனே காவலனென்றும் சொல்கிருள்! கள்வனும் காவலனும் ஒருவனே என்றுல் என் செய்வேன் என்று ஏங்குகிருள்! இதே கருத்தை இதே நிலையில் இருக்கும் நவரத்ன மாலையைப் பார்த்து, அவளின் அன்னை அறைகிருள! இரண்டும் ஒரே கருத்துக்கள்! என்றுலும் படிக்க படிக்கப் இனிக்கின்றன! இதோ அந்தத் தாயார் சொல்கிருள்.

"கன்னம் ஒருவரிட்டாற்
காவலனோ டேயுரைப்போம்
மன்னவனே இந்த வலுமை
செய்தால் ஆர்க்குரைப்போம்?"

'யாராவது திருடினுல் மன்னவனிடம் முறையிடுவோம். மன்னவனே கன்னமிட்டு வலுமை செய்துவிட்டால் யாரிடம் முறையிடுவோம்?' அந்தத் தாய் மிகச் சாமர்த்தியமான கேள்வியை எழுப்புகிருள். அருமையான நயங்களை உள்ளடக்கிய இந்தக் கவிதை வரிகள் பெருமை நிறைந்தவை சிற்றின்பக் கவிஞன் என்று சொல்லப்படும் சுப்ரதீபக் கவிராயரால் இந்த வரிகள் பாடப்பட்டவை! ஆனுல எந்த வார்த்தையிலும் சிற்றின்ப-காமரசத் துளிகள் தளும்பக் காணேம்!

பாண்டியனைக் காதலித்த பெண்ணும், கூளப்ப நாயக்கனைக் காதலித்த நவரத்ன மாலையும் - ஒரே நிலையில் தவிக்கிருர்கள்! அந்த நிலைகளை இரு புலவர்களும் ஒரே கருத்தால் நிரப்புகிருர்கள்! கூளப்ப நாயக்கன் காதல் - சுப்ரதீபக் கவியால் பாடப்பட்டது! சிற்றின்ப ரசங்கள் ததும்பும் அடிகள் அங்கங்கே மின்னலிடும்! எனினும் நவரத்ன மாலையின் கவலை நிலையை - முத்தொள்ளாயிரக் காதலியின் கருத்தோடு இணைக்கிருர்! இதில் சுப்ரதீபக் கவியின் காதல் உள்ளம் சுடர் விடுகிறது.

★

மிதிலைமா நகரம் மிகப் பெரும் அளவிலும் செலவிலும் அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆடவரும் பெண்டிரும் அழகு நயனங்களில் ஆர்வம் ததும்ப நகரில் உலவுகின்றனர். யாருடைய வருகையையோ அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர் என்பது சொல்லித் தெரியவேண்டியதாக இல்லை! அவர்களின் செயல்களும், கண்ணேட்டமும் அதனை உறுதிசெய்கின்றன.

நால்வகைப் படைகளும் சூழ, விஸ்வாமித்திரர் உடன்வர, இலட்சுமணன் பின்தொடர - கார்மேக அண்ணல், தசரத புத்திரர் - இராமர் வீதியுலா வருகிருர்! மாந்தரும் மங்கையரும் அம்மன்னர் மைந்தனை நோக்குகின்றனர்! அழகு செழிக்கும் அவரின் அங்கங்கள்! விழியிலே சுழிப்பிடும் கழிபேருவகை! பீடு நடையிலே நீங்காமல துள்ளும் கவர்ச்சி!

இராமபிரானின் அழகிலே சொக்கிச் சுருண்டுபோயினர் மிதிலை மாதர்கள்! சில சிற்றின்பப் பிரியர்களாம் - தவறு வெறியர்களாம் ஆண்களும்கூட, 'நாம் பெண்ணுகப் பிறந்திருந்து, இராமனோடு கூடிக் களித்திருந்தால்...!' என்று எண்ணினராம்! அழகு மாடமொன்றிலே நின்று - அண்ணலின் உலாவை உற்றுநோக்கியிருந்தாள் ஊர்வசியன்ன ஒரு மடவன்னம்! அவளின் நெஞ்சம் தீயாக எரிந்தது! ஆமாம் காமத்தீ அவள் பஞ்சு மேனியெல்லாம் சஞ்சாரம் செய்தது! இராமனின் அழகு அவளை அலைக்கழித்தது. வீதிவிட்டு வீதி உலா செல்லும் மன்னர் மகன் - அம்மங்கையின் காட்சியிலிருந்து மறைந்து போனுன்!

அப்பெண்ணுக்கு மனதை அடக்கும் திராணி இல்லை! தன்தோழியை நோக்கினுள்! "தோழியே! அந்த வஞ்சக மனமுடைய வள்ளல் என் மனதில் புகுந்து கொண்டான். என் கண்வழியே புகுந்த அவனை, வெளிப்போகா வண்ணம் இமைக் கதவுகளால் மூடிவிட்டேன். தாமதம் செய்யாமல் அமளி சேர்வோம் - இனம் துய்க்க! என் தோழியே என் விழிக்கிருய்? உன்னையும் உடன் அழைத்தேனே இன்பம் அனுபவிக்க என்று வியக்கிருய? இதில் வியப்பென்ன இருக்கிறது வனிதையே! நீயும் பெண் - நானும் அவ்வாறே! எனக்குள்ள ஆசை, மோகம், தாபம் எல்லாம் உனக்கும் இருக்கும் அல்லவா? அதனுல்தான் உனையும் உடன் சேர்த்து 'அமளி சேருதும்' என்றேன. வா, தோழி! வா, விரைவாக வா! அந்தக் கார்மேக வண்ணன் விடைபெறும் முன் - நாம் இன்பம் பெறுவோம்!" என்று அந்த மங்கை உருகினுள்.

காமப்பித்தேறிய இந்த மங்கை யார் என்கிறீர்களா? முத்தொள்ளாயிரக் காதற் கன்னியையும், நவரத்னமாலையையும் கண்ட உங்களுக்கு - தோழியையும் துணைக்கு அழைத்து 'அமளியில் ஆனந்தம் அனுபவிப்போம்' என்று பிதற்றும் மிதிலை மங்கையின் உருவைக் காண வேண்டும் என்ற ஆசை இருக்காதா? அதற்குத்தான் இதோ - கம்பரின் இராமகாதையில் வரும் இப்பாடலை உங்கள் முன் வைக்கிறேன்!

"மைக்கருங் கூந்தல் செவ்வாய்
வாணுத லொருத்தி யுள்ளம்
நெக்கென ஒருத இன்று
ணெஞ்சிடை வஞ்சன் வந்து
புக்கனன் போகா வண்ணங்
கண்ணெனும் புலங்கொள் வாயும்
சிக்கென வடைத்தேன் றோழி
சேருது மமளி யென்ருள்." ★

சுற்றுப் பயணம்

பிப். 20-ம் தேதி நடைபெற இருக்கும் பொது வேலை நிறுத்தம் குறித்து விளக்கம் கூற பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என். வி, நடராசன், தோழர் கண்ணதாசன் மூவரும் 12-2-56 முதல் தென்னுடு முழுதும் சுற்றுப் பயணம் செய்கிருர்கள்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு!

தோழர்கள் கோரியபடி அடுத்த இதழ் சனிக்கிழமையன்றே எங்கும் கிடைக்கும். உடனடியாக ஏஜெண்டுத் தோழர்கள் பாக்கிப் பணத்தை அனுப்பக் கோருகிறேம், தவறுவோர்களுக்குப் பத்திரிகை நிறுத்தப் படுவதோடு அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும். உடனே அனுப்புக.

நிர்வாகி.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

16

வாழ்க்கை அப்படி ஒன்றும் துன்பமானதல்ல. இன்னல்களையும் இக்கட்டுகளையும் சாதாரணமாகக் கருதக்கூடிய மனப்பக்குவம் பெற்று விட்டால், ஆயுள் ஒரு ஐநூறு ஆண்டுகளாவது நீடிக்காதா என்று தோன்றும். அதுவும் இளம் பெண்ணொருத்தியின் மடியிலே தலை சாய்த்துக் கிடக்கும் நேரம், இன்ப உலகத்தின் முழுவடிவத்திலும் உலாவி வருகிற நேரம். அப்போது, மனப்பக்குவம் இல்லாதவனுக்குக் கூடத் துன்பமில்லை. "அப்படி என்னதான் இருக்கிறது அதிலே?" என்று சிந்தித்துப் பார்த்தால்கூட, சிந்தனைக்குப் பிடிபடாத "என்னமோ" இருக்கிறது! இத்தனைக்கும் ஆண் பெண் இருபாலாருக்குமே என்பும் சதையும் குருதியும்தான் மேனி வடிவமாக இருக்கிறது! இயற்கை இயற்கை என்கிறோமே அது இதுதான். காதலிலே அடிபட்டு அனுபவித்து, உழன்று, "சிச்சீ! நாற்றச் சரீரம்! இதற்கு நான் அலைந்தேனே!" என்று அனுபவத்தின் விடையாக வெறுப்புத் தத்துவம் கண்டுபிடிக்கும் வேதாந்திகூட, அந்த நேரத்தில் ஒரு பெண்ணைக் கண்டால் சபலப்படுகிறான். உலகம் அதில்தான் உருளுகிறது. பணம்கூட, அதற்குத்தான் தேவைப்படுகிறது. இவ்வளவு மகத்தான சக்தி கொண்ட ஆண் பெண் உறவின் சுகத்தை அம்பிகாவும் சங்கரனும் கண்டு வரைந்தார்கள். அம்பிகாவின் மடியிலே தலைவைத்துப் படுத்த சங்கரன், பொழுது விடிகிற நேரத்தில் கண்ணயர்ந்தான். உட்கார்ந்தபடியே அம்பிகா தூங்கினாள். எழுந்தாலோ, தானும் சாய்ந்தாலோ, சங்கரன் விழித்துக் கொள்வானே என்ற பரிதாபம் கலந்த அன்பு அவள் மனத்தை வட்டமிட்டது. அம்பிகா-பெண்! ஆம்; தாய்க்குலம் மட்டும் இல்லாவிட்டால், மனிதர்கள் ஒருவரை ஒருவர் கடித்துத் தின்றுவிடுவார்கள். எல்லோருக்கும் பைத்தியம் பிடித்துவிடும். பிரமச்சரியத்தின் முதிர்ச்சி, பைத்தியம்! விழித்த அம்பிகா, சங்கரன் முகத்தை ஆசைதீரப் பார்த்தாள். கன்னத்தை வருடிக் கொடுத்தாள்; தலையைத் தடவித் தந்தாள். தானுக்ப் புன்னகை பூத்தாள். இரவின் இன்பநினைவுகளை மீண்டும் எண்ணிப் பார்த்தாள். அசாத்தியத் துணிவு ஒன்று அவளை ஆட்கொண்டது. வெளியில் பால்காரன் சப்தமும் வேலைக்காரர்கள் சப்தமும் 'சாஸ்த்ரீய சங்கீதம்' போல 'கசமுச' என எழுந்துகொண்டிருந்தன.

பொழுது நன்ருக விடிந்தது. சங்கரன் லேசாகக் கண்ணைத் திறந்தான். அம்பிகா, விழித்துக் கொண்டே இருப்பதைக் கவனித்தான். தன் தலையை அவள் கரங்கள் தாங்கியிருப்பதை உணர்ந்தான். பொழுதே இன்பத்தோடு விடிந்ததாகத் தோன்றிற்று, அவனுக்கு!

"அம்பிகா! நீ தூங்காமலா இருந்தாய்?" அன்போடு கேட்டான். "இல்லையே! நன்ருகத் தூங்கிவிட்டேன். இப்போதுதான் விழித்தேன்" என்ருள் அம்பிகா. அவன் அதை நம்பவில்லை. உண்மையிலேயே மனைவி தூங்கியிருந்தாலும் தனக்காக அவள் தூங்காமல் இருந்தாள் என்று முடிவு கட்டிக் கொள்வதிலே கணவனுக்குப் பரம திருப்தி ஏற்படுகிறது. சங்கரன் அன்பு கலந்த ஒரு கோபத்தோடு அம்பிகாவைப் பார்த்தான். "என் தலையைத் தூக்கித் தலையணையில் வைத்துவிட்டு நீ தூங்கியிருக்கலாமே" என்பது போலிருந்தது, அது. அம்பிகா சிரித்துக் கொண்டே தலை குனிந்தாள். சங்கரன் அவள் தோளில் கைவைத்து முகத்தை நிமிர்த்தி அந்தக் கண்களைக் கவனித்தான். அவள் தூங்காமல் இருந்த பெருமைக்குக் கொஞ்ச நேரம் அழவேண்டும் போலிருந்தது அவனுக்கு. இமைக்காமல் அவளையே பார்த்தான். கண்ணீர் வந்தது. அந்தக் கண்ணீருக்கு அம்பிகாவிடமிருந்து பரிவு வெளிப்படும் என்று, எண்ணுமல் எண்ணிய எண்ணத்திற்குப் பதில் கிடைக்காமல் போகவில்லை. "ஐயோ அழாதீர்கள்! என் கண்ணல்ல!" என்ருள் அம்பிகா. தனியாய் இருக்கும் கணவனும் மனைவியும் தாறுமாருகக் காதல் பேசினாலும் ஊருக்கா தெரியப் போகிறது? என்னென்னவோ வேடிக்கையான நாடகங்கள் இரண்டு பேருக்குள்ளேயே முடிந்துவிடுகின்றன!

காலை மணி பத்தாகியும் சங்கரன் அம்பிகா நாடகம் முடிவதாயில்லை. சம்பூர்ண ராமாயணம் கூட காலை ஆறு மணிக்கு முடிந்துவிடும். ஆனால், அம்பிகா சங்கரன் முதல் இரவு நாடகம் வடுவூரார் நாவல் போலவளர்ந்து கொண்டே இருந்தது. வெளியிலே வேலைக்காரர்கள்,"உள்ளே எஜமானர் தூங்குகிருர்" என்று எண்ணி, எழுப்பலாமா வேண்டாமா என்று தடுமாறிக் கொண்டிருந்தனர். ஒருவன் மெதுவாக, "அம்மா, அம்மா" என்று குரல் கொடுத்தபடி கதவைத்தட்டினான். அம்பிகா எழுந்து கதவைத் திறந்தாள். அவள் தானே இப்போது எஜமானி! கதவு திறக்கும்போது அந்தக் கம்பீரமே வந்துவிட்டது அவளுக்கு. 'இரண்டு கோப்பைகளில் காபியோடு வேலைக்காரன் நின்றுகொண்டிருந்தான். அம்பிகா அதை வாங்கி மேசையில் வைத்துவிட்டு, "டேய்! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா" என்று குரல் கொடுத்தாள். பிறகு சங்கரன் எழுந்து, முகம் கழுவிக் காபி குடித்தான். அம்பிகா தன் கையாலேயே அவனுக்குத் துண்டு எடுத்து வைத்தாள். தண்ணீர் இறைத்துக் கொடுத்தாள். அவன் குளித்ததும் துவட்டிவிட்டாள். தலையைக் கோதிவிட்டாள். சீவினாள். கடிகாரம் கட்டிவிட்டாள். பிறகு இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு கட்டிலில் உட்காரச் செய்தாள். 'இருங்கள் ஒரு ஐந்து நிமிடத்தில் வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு உள்ளே ஓடினாள்.

பதினைந்து நிமிடங்களில் அழகின் வடிவமாக அலங்காரச் சிலையாகப் புதிய உருவில் தோன்றினாள். இப்போது அவள் பட்டைச் சரிகை போட்ட சிவப்பு வர்ணக் காஞ்சீவரம் கண்டாங்கியும் ஊதா நிறத்து வெல்வெட்டு ரவிக்கையும் அணிந்திருந்தாள். கைகளிலே புதிய வளையல்கள் மின்னின. நெற்றியிலிருந்த சிறிய சாந்துப் பொட்டு அந்தத் தங்கச் சிலையின் அழகைத் தொட்டுக் காட்டுவது போல் இருந்தது. உதடு வெளுத்திருந்தது. அதைக் கவனித்த சங்கரன் அந்தக் குறையை உண்டாக்கியவன் தானே என வருத்தப்பட்டுக் கொண்டான். எதிரே நின்ற அவளை மேலும் கீழும் மாறி மாறிப் பார்த்தான். இரவு இருந்ததைக் காட்டிலும் இப்போது அவள் புதிய அழகோடு துலங்குவதாக அவன் மனம் மயங்கியது. நல்ல சேலைக்கும் ரவிக்கைக்கும் பெண்கள் ஆலாய்ப் பறக்கிருர்கள் என்ருல் அதில் அர்த்தமில்லாமல் இல்லை. அவைதான் கணவனுக்குப் பாதி வெறியை ஊட்டுகின்றன. தினமும் மனைவி சிங்காரத்தோடு விளங்கினால் கணவன் வேருெருத்தியை நாட நியாயமில்லை.

அம்பிகா கைகளில் ஒரு கத்தை மலர் வைத்திருந்தாள். அதைக் கூந்தலிற் சூடிக்கொண்டாள். அந்த மணம் அறை எங்கும் பரந்தது. சங்கரன் மூர்ச்சை போட்டு விடுவான் போல் இருந்தது. அப்படியே எழுந்து அம்பிகாவை அரவணைத்துக் கொண்டு ஒரு முத்தம் பதித்தான். "கண்ணு! கண்ணு!" என்று மாறி மாறிச் சொன்னான். அவள் சிரித்தபடியே அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அப்போது வாசலிலே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. அதிலிருந்து யாரோ இறங்கிக் கதவைச் சாத்துகிற சப்தமும் அம்பிகாவுக்குத் தெளிவாகக் கேட்டது. அம்பிகா ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். அங்கே வனஜா நின்ருள். இருவருக்கும் அதிர்ச்சி. வனஜா அதை எதிர்பார்த்தவள் போல முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டாள். சங்கரன் தலையைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். வனஜா அவன் அருகில் வந்தாள். நின்ருள். திரும்பிப் பார்த்தாள். அதற்குள் அம்பிகா அடுத்த அறைக்குச் சென்றுவிட்டாள். வனஜா தானே போய்க் கதவைச் சாத்திவிட்டு வந்தாள். சங்கரன் அருகில் உட்கார்ந்தாள். அவனை அடையாளம் கண்டு கொள்ளவே இல்லை. முதலாளி என்றே நம்பினாள். "ஏன் சார் இதுதான் நியாயமா? எங்கள் வீட்டு வேலைக்காரியிடமா உங்களுக்கு ஆசை வந்தது? முதல் முதலில் உங்கள் கரம் பற்றியவள் நான். ஆண்கள் தீண்டியறியாத என் மேனியை உங்களுக்கு முதன் முதலில் அர்ப்பணித்தவள் நான். "என் மனைவியாக இரு" என்று நீங்கள் சொல்லியிருந்தால்கூட உங்கள் காலடியில் விழுந்து கிடக்கக் கூடியவள் நான். நினைத்துப் பாருங்கள்! அந்த ஒருநாள் நாம் எவ்வளவு சந்தோஷமாக இருந்தோம்! நம் உறவை முறிக்க எங்கள் வீட்டு வேலைக்காரியே துணிந்தாள். உங்களுக்கு இது சம்மதமா? கௌரவம் இல்லாத

ஒருத்தியைப் பக்கத்திலேயே வைத்துக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா? அவளைப் போகச் சொல்லுங்கள். நான் உங்களுடனேயே இருந்துவிடுகிறேன். நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?'' என்று பேசியபடியே அவன் முகத்தைத் திருப்பினாள். சங்கரன் ஒரே வரியில் ''எனக்கு நீ தேவையில்லை! போய்விடு'' என்றான். வனஜா ஆத்திரத்தோடு எழுந்து நின்றாள். உடனே சங்கரன் எழுந்து அடுத்த அறைக்குள் சென்றுவிட்டான். கொஞ்ச நேரம் அங்கேயே நின்ற வனஜாவின் கண்களில் ஒரு பழைய தபால் உறை தட்டுப்பட்டது. அதில் 'சங்கரன்' என்று விலாசம் எழுதப்பட்டிருந்தது. அவளுக்கு இப்போது வலுவான சந்தேகம் பிறந்தது. தைரியத்தோடு அவளும் அடுத்த அறைக்குள் சென்றாள். அங்கே சங்கரன் அம்பிகாவோடு ஏதோ ரகசியம் பேசிக்கொண்டிருந்தான். அவனை ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டு, ''வருகிறேன் சார்'' என்று விடைபெற்றுக்கொண்டாள் வனஜா.

காரில் ஏறி நேரே வீட்டிற்குச் சென்றாள். குட்டி போட்ட பூனைபோல் முனகிக்கொண்டிருந்தாள். அமைதியின்றி முன்னும் பின்னும் நடந்தாள். மத்தியானம் சாப்பிடக்கூட இல்லை. கினஜா காரணத்தைச் சாடைமாடையாகப் புரிந்துகொண்டு பேசாமல் இருந்துவிட்டாள். மாலை ஆறு மணி சுமாருக்கு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல வனஜா காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனாள். விவரங்களை இன்ஸ்பெக்டரிடம்சொன்னாள். உடனே இன்ஸ்பெக்டர் ஒரு நீலவாகனத்தில் சில கான்ஸ்டேபிள்களைக் கூட்டிக் கொண்டு அவள் காரைப் பின்தொடர்ந்தார்.

சங்கரன் வீட்டருகே கார் வந்து நின்றது. பட படவென்று கான்ஸ்டேபிள்கள் இறங்கி உள்ளே சென்றார்கள். சுற்றிலும் சில கான்ஸ்டேபிள்கள் காவல் நின்றார்கள். வனஜா வெற்றிப் பெருமிதத்தோடு தன் காரின் அருகிலேயே நின்றாள். போலீசார் வீடு முழுக்கச் சோதனையிடத் தொடங்கினார்கள். ஆனால் அங்கே சங்கரன் இல்லை. ஐந்து மணிக்குச் சங்கரனும் அம்பிகாவும் காரிலே புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள் என்கின்ற செய்திதான் அவர்களுக்குக் கிடைத்தது. கார் நம்பர் என்ன என்று விசாரித்தார்கள். வேலைக்காரர்கள் ஆளுக்கொரு நம்பர் சொன்னார்கள். அவர்களைக் கைதுசெய்துகொண்டு இன்ஸ்பெக்டர் ஸ்டேஷன் நோக்கிப் புறப்பட்டார். வனஜா ஏமாற்றத்தோடு வீடு திரும்பினாள்.

அந்த நேரத்தில், அம்பிகாவும் சங்கரனும் சென்ற கார் சென்னையைக் கடந்து 70 மைல்களுக்கப்பால் சென்றுவிட்டது. அம்பிகாவை அணைத்தபடி காரிலே மயங்கிக் கிடந்தான் சங்கரன்.

11

தள்ளுபடிப் படலம்

எல்லாம் நன்மைக்கே!

—தத்துவம்

இந்திரா, பாலன், சுந்தரம் ஆகியோர் தியாகராய நகரிலேயே ஒரு வீடு பிடித்துக்கொண்டு தங்கியிருந்தார்கள். வழக்கு விசாரணைத் தேதியன்று மூவருமே கோர்ட்டுக்குச் சென்றார்கள். அன்றைய விசாரணையில் அம்பிகாவைக் காண முடியவில்லை என்று, ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டார் ரங்கலட்சுமியின் வக்கீல். வழக்கு ஒத்திவைக்கப் பட்டது. அப்படியே மூன்று முறை ஒத்திவைக்கப்பட்ட பிறகு, அதற்கு மேலும் ஒத்திவைப்பதற்கில்லை என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார் நீதிபதி. பாலன் ஆனந்தத்தில் மிதந்தான். இந்திராவும் அப்படியே! சுந்தரம் ஒரு பெரிய காரியம் முடிந்ததாகத் திருப்திப் பட்டுக்கொண்டான். 'எதற்காக வீடு பிடித்தோம்' என்று மூன்று பேருமே வருந்தப் பட்டுக்கொண்டார்கள். ஆனாலும் வழக்குத் தள்ளுபடியான மகிழ்ச்சியில் அது ஒன்றும் பெரிதாகத் தோன்றவில்லை. இந்திராவும் பாலனும் அன்று இரவு முழுவதும் ஆனந்தக் கடலில் மிதந்தார்கள்.

மறுநாள் சுந்தரம் புதுக்கோட்டைக்குப் புறப்பட்டான். ''இன்னும் நான்கு நாள் இருங்கள் அண்ணா'' என்று வற்புறுத்தினாள் இந்திரா. அந்த வீட்டிலேயே குடியிருந்து விடுவதென்று முடிவு கட்டிகொண்டுதான் அவள் அவ்வாறு கூறினாள். அதை அங்கீகரித்துவிட்டு, ''நாலு நாளில் வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டான் சுந்தரம். இந்திராவும் பாலனும் புகைவண்டி நிலையம் வரை சென்று அவனை வழியனுப்பி வைத்தார்கள்.

அடுத்தநாள், கடைகளுக்குச் சென்று வீட்டை அலங்கரிப்பதற்கு வேண்டிய சாமான்களை வாங்கி வந்தார்கள். போட்டோக் கடைக்குப் போய்ப் படம் எடுத்துக் கொண்டார்கள். அன்று மாலை வீடு திரும்பியதும் இந்திரா வாந்தி எடுத்தாள். பாலனுக்கு விவரம் புரிந்தது. திருமணம் ஆகி இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன அல்லவா? சிரித்துக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான். அவள் தன் கண்களால் பதில் சொன்னாள். இந்த நிலையில் திடீரென்று பாலன் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அது ஹோட்டல் முகவரிக்குப் போய்த் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் சொல்லிய செய்திகளின்படி, அம்பிகா கல்கத்தாவில் இருப்பதையும், திருமணம் செய்துகொண்டதையும் விளங்கிக் கொண்டான் பாலன். ஆனாலும், அதில் அம்பிகாவின் முகவரி குறிக்கப்படவில்லை.

இந்திரா தன் குடும்பத்தில் பட்ட அனுபவங்களை வைத்து வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று திட்டம் தயாரித்துக் கொண்டாள். கணவனின் சட்டை வேட்டிகளைத் தானே துவைத்து, பெட்டி போட மட்டும் வெளியில் அனுப்பினாள். ஒரு பட்ஜெட் தயாரித்தாள். அதிலே அவளுக்கு வேண்டிய அலங்காரச் சாமான்கள் ஒன்றுமேயில்லை. செருப்புத் துடைப்பது முதல் சிகை அலங்காரம் வரை கணவனுக்கு எல்லாப் பணிவிடைகளையும் தானே செய்தாள். அதிலே ஒரு அலாதி உற்சாகம் அடைந்தாள். எப்போதும் தன்னை அழகாக வைத்துக் கொண்டாள். பத்திரிகாலயத்திலிருந்து பாலன் திரும்பும்போது, ஏதோ நிறையப் படித்தவள்போல அரசியல் விஷயங்களை விவாதிக்க ஆரம்பித்தாள். கறுப்புப் பெண்களும், கணவனுக்குக் காதலை ஊட்ட முடியும் என்பதற்கு உதாரணமாக விளங்கினாள். 'காதல் டூயட்' உள்ள 'ரிகார்டு'களாக வாங்கினாள். பாடிப் பாடிப் பார்த்துக் கொண்டாள். பக்கத்து வீட்டுப் பருவதம் புது தினுசில் ரவிக்கை போட்டிருப்பதைப் பார்த்து, அதுமாதிரிப் போட்டுக் கொண்டால் தானும் நாகரிகமாகத் தன் கணவன் கண்களுக்குத் தட்டுப்படலாம் என்று எண்ணி அந்த ரவிக்கைக்காக ஒரு பத்து ரூபாய் செலவழித்தாள்.

தினசரி தன் மனைவி புதுப்புது அலங்காரத்தோடு விளங்குவதைப் பாலன் கண்டான். அவளது அந்தரங்க நோக்கம் பிடிபட்டதால் அந்த அலங்காரங்களை வெகுவாக ரசித்தான். எழுத்தாளனல்லவா? அழகான ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டு அழகற்ற ஒரு பெண்ணிடம் காதல் புரியும் சக்தி எழுத்தாளனைத் தவிர வேறு யாருக்கு வரும்? நேரே பார்த்தாலும் கண்ணாடியிற் பார்த்தாலும் அம்பிகா கறுப்புத்தான். மனத்தாலே பார்க்கும்போதுதான் பாலனுக்கு அவள் அழகி. அவள் செய்துகொண்ட அலங்காரங்கள் ஒட்டவே இல்லை. ''இது செயற்கை! இது செயற்கை'' என்று எடுத்துக்காட்டிக் கொண்டுதான் இருந்தது. பாலன் அதை அவளிடம் சொல்லவில்லை. இலக்கியத்திலிருந்து மேற்கோள் காட்டி அவள் அழகை விமர்சித்தான். ''சித்திரத்தில் இருப்பது போலவே இடை இருக்கிறது'' என்றான். ''ஆறடிக் கூந்தல் ஆவியைப் பறிக்கிறது'' என்றான். சுருக்கமாக, அனுமனிடம் ராமன் வர்ணித்ததாகக் கம்பன் சொன்னதை அப்படியே கையாண்டான். இந்தக் கற்பனையிலேயே கடைசிவரை வாழ்ந்துவிடவேண்டும் என்று முடிவும் கட்டிக் கொண்டான்.

நாட்கள் நகர்ந்தன. பாலன் வாழ்க்கை வம்பில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. ''எந்த விதத் துன்பமும் இனி இருக்காது'' என்று அவர்கள் முடிவு கட்டிக் கொண்டார்கள். ஆனால், உலகம் தோன்றியது முதல் ஒரே பாட்டையில் நேராக யாருடைய வாழ்வும் ஓடியதில்லையே! அவர்கள் மட்டுமா அதற்கு விதிவிலக்காக முடியும்? வாழ்க்கை வளைந்து நெளிந்து போவதற்குத் தெய்வமோ, விதியோ காரணமல்ல. எல்லோர் வாழ்விலும் அது ஏற்படுகிறது என்பதற்காக அதற்கொரு அதீத சக்தி கொடுத்துவிடுவது மடைமை. காட்சி உலகின் அலை மாற்றங்கள் மனித மனத்தின் உணர்வை மாற்றுகின்றன. சுற்றுச் சார்புகள், பள்ளம் மேடுகளை உண்டாக்குகின்றன. அவற்றை ஒரே அளவில் தாண்டக் கூடிய சக்தியை ஒரு சிலரே பெறுவதுண்டு. அந்த ஒரு சிலரில் சராசரி மனிதர்களான பாலனோ இந்திராவோ அடங்கமுடியாது. வாழ்க்கையின் ஆசா பாசங்களுக்கும் தோற்றத்தின் மாற்றங்களுக்கும் வலியக் கட்டுப்படுகிற மனம் மனித மனம். அதை ஒரே நிலையில் இருக்கச் செய்யத் தொல்லைப்பட்டு முயற்சித்தால் உடம்பெல்லாம் எரிவது போலிருக்கும். இரும்பே துருப்பிடிக்கும் போது எலும்பும் சதையும் எவ்வளவுக்குத் தாங்கும்! ஆம்! நன்கு ஓடிக் கொண்டிருந்த இந்திரா பாலன் வாழ்க்கையில் துன்பம் குறுக்கிடும் நிலைமை ஏற்பட்டது. கர்ப்பிணியான இத்திராவின் மேனியில் சில தடித்த தழும்புகள் தோன்றின. அவை நாளுக்குநாள் அதிகரித்தன. விவரம் புரியாத பாலன் டாக்டரை அழைத்துப் பார்த்தான். அவர் கண்டுபிடித்த நோய் பாலனின் இதயத்தைச் கசக்கிப் பிழிந்தது.

இந்திராவுக்குக் குஷ்டம்!

புது வெள்ளம்....

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

வோம், வேடத்தைக் களைந்துவிடுவோம் என்ற கெட்ட எண்ணம் என்னை ஆட்கொள்ளும் போதெல்லாம் அவருடைய நினைவு எங்கிருந்தோ வந்து என்னை முற்றுகையிட்டுவிடுகிறது. அவர் மரணப் படுக்கையில் கிடந்தபோது என்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சொல்லிய வார்த்தைகளை எந்நாளும் என்னால் மறக்க முடியாது. அவருக்காகத்தான் இந்தக் கிளிசல் பாவாடை! அவருக்காகத்தான் இந்த பாசியும் பவழமும்! அவருக்காகவேதான் இந்தக் குடிசைக் குடித்தனமும் குறவர்குலப் பாசமும்!”

செல்வத்தால் “ச்சு! ச்சு!” போடத்தான் முடிந்ததே தவிர வேறொன்றும் பேச முடியவில்லை, ‘விர்’ என்று உள்ளே எழுந்து போய் ஒரு புதிய கைத்தறிப் புடவையையும், ஓலைப்பெட்டி நிறையத் தின்பண்டங்களையும் கொண்டு வந்தாள். குறத்தியின் கை நிறையக் கொடுத்து அவளுடைய புண்பட்ட நெஞ்சைப் பூரிப்படையச் செய்ய எண்ணிய செல்வத்தின் நல்ல எண்ணம் நிறைவேறவில்லை. வீட்டுக்குள் போய்த்திரும்புவதற்குள் குறத்தி மறைந்துவிட்டாள்; எங்கோ போய்விட்டாள். ஏன் போனாள்? செல்வத்தின் கணவர் அப்போதுதான் காரில் வந்திறங்கினார். குறிப்பறிந்து நடப்பவள், வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திற்கும் இழுத்தடிக்கப்பட்டவள். அதன் பிறகு அங்கு ஏன் நிற்கப் போகிறாள்! திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஜல், ஜல் எனக் கழுத்து மணி ஒலி கிளப்பிச் செல்லும் மிராசுதார் வீட்டுப் பூரணிக் காளை போல் அந்தக் குறத்தி—தமிழ்க் குறத்தி சொக்கனுதப்பள்ளிக் கண்மாய்க்கரையை நோக்கி நடந்தாள். அங்கேதான் அவள் குடிசை!

★

செல்வத்தின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. எப்போதும் இருக்கும் இன்ப ஒளியைக் காணோம்.

“செல்வா, ஏன் சோகமாக இருக்கிறாய்? உடம்புக்குஎன்ன? சாமான்கள் கூட வைத்தது வைத்தபடி இருக்கின்றனவே! சொல்லு செல்வா!”-கேட்டார் அவள் கணவர்-மாவட்ட உயர்தர அதிகாரி.

“ஒன்றுமில்லை. உலகத்தில் எத்தனையோ உண்மைக் கதைகள் யாருக்கும் தெரியாமல் நடந்து முடிந்து விடுகின்றன. கேட்போர் இரக்கப்பட்டும் பயன்பட முடியாத நேரத்தில் அவைகள் அம்பலமாகின்றன. அதனால் என்ன ஆகப் போகிறது. என் வாழ்க்கையிலே இன்றுதான் மிகப் பெரிய சோகத்தை அனுபவித்திருக்கிறேன். நீங்கள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் வேளைகளிலெல்லாம் சூறாவளி வேகத்தில் பணிவிடை செய்யும் நான் இன்று உணர்ச்சி யற்ற கட்டையாக இருக்கிறேன்.” செல்வத்தின் முன்னுரை நீண்டது.

“செல்வா!”

“குறத்தி ஒருத்தி வந்தாள். ஆம் அவளைக் குறத்தி என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் பிறவிக் குறத்தியாக இருக்க முடியாது.”

“என்ன செல்வா! குறத்தி என்று சொல்லு. அல்லது குறத்தி அல்ல என்று சொல்லு. குழப்பத்துடனேயே கதையைத் தொடங்குகிறாயே” கலெக்டர், செல்வாவின் உள்ள நிலையையும் மறந்து வழக்கமான பாணியில்கேட்கஆரம்பித்தார். பருவத்தால் ஏவிவிடப்படும் குறும்புச் செயல்களில் கலெக்டருக்குச் சற்றும் சளைத்தவளல்ல செல்வம். ஆனால் அன்று கவலையால் ஒடுங்கிப் போயிருந்தாள். குறத்தியின் தோற்றம் அவள் உள்ளத்தை அறுத்துக்கொண்டிருந்தது. இல்லாவிட்டால் கலெக்டரின் ‘இன்பக் குறும்பு’களுக்குத் துவக்கவிழா நடத்தியதற்கு அவளா அடங்கிக் கிடப்பவள்!

“ஆமாம், நான் சொல்லும் கதை உங்களுக்கு எப்போதும் குழப்பமாகத்தானிருக்கும்! குறத்தி என்றேனே, அவள்குறத்தி அல்ல, அந்தக் குறத்திக்குத் தாய் தந்தையரின் முகங்களே தெரியாதாம். எப்படியோ அந்தக் குறவர் குலத்தில் சேர்ந்துவிட்டாள். மகாலெட்சுமி மாதிரி இருக்கிறாள்.”

இதைக் கேட்டதும் தலையணையில் சாய்ந்திருந்த கலெக்டர் எழுந்து உட்கார்ந்தார்.

“செல்வா!”

“பொய்யா சொல்லுகிறேன்! நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். நாளை நிச்சயம் இங்கே வருவாள்!”

“தமிழ்ப் பேசுகிறாளா?”

“தமிழ்ப் பேசுகிறாளாவா! மற்ற குறவர் ஜாதிப் பெண்கள் திட்டுவார்களே என்பதற்காகக் குடிசைகளில் மட்டும் குறவர் மொழியில் பேசுவாளாம். மற்ற நேரங்களில் தமிழ் தமிழ் என்றுதான் உயிரைக் கொடுக்கிறாள் பாவம்!”

“செல்வா! புறப்படு! இப்போதே போய் அவளைப் பார்ப்போம். எனக்கொரு சந்தேகம்! கிளம்பு! எல்லாவற்றையும் பிறகு சொல்லுகிறேன்.” குறவர்கள் கூடாரமடித்திருந்த சொக்கனுதப்பள்ளி கண்மாயை நோக்கி கலெக்டரின் கார் விரைந்தது. அப்போது இரவு மணி பத்துக்கு மேலிருக்கும்.

ஒரு நாள், இரண்டு நாள் கால தாமதத்தால் உலகத்தின் போக்கே மாறி இருக்கிறது என்று சரித்திரத்திலே படித்திருக்கிறோம் ஆனால், நான்கு மணி நேரத்தாமதத்தால் ஒரு வனிதையின் வாழ்வே கருகிப் போய்விட்டது.குறத்தி, செல்வநாயகியின் பங்களாவை விட்டுப் புறப்படும்போது மாலை ஆறு மணி. கலெக்டரும், அவர் மனைவி செல்வாவும் குறத்தியைத் தேடிக் கண்மாய்க் கரைக்கு வரும்போது இரவு பத்துமணி இடையிலே நான்கு மணிநேரம்! அந்த இடைவேளையில்தான் குறவர்கள் குடிசைகளை வேறு ஊருக்கு மாற்றியிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்குள் ஒரு கிராமத்தையே உண்டாக்கி அழித்துவிட்டுப் போய் விட்டார்கள்.

கலெக்டரும் செல்வாவும் குறவர்கள் குடியிருந்த இடத்தைத் தான் பார்க்க முடிந்தது. உடைந்த பானைகள், அரை குறையாக எரிந்திருந்த தென்னங் கீற்றுக்கள், இவைகளைத் தான் அவர்களால் காண முடிந்தது.

ஒரு வாரம் கழிந்தது. இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்த திருவாடானைப் பகுதியில் நரிக் குறவர்கள் கூடார மடித்திருப்பதாகச்செய்திகிடைத்தது. கலெக்டரின் மகிழ்ச்சிக்கு அளவில்லை புறப்பட்டுப் போனார். “கடவுளால் கூடச்சாதிக்க முடியாத காரியத்தை நான் சாதிக்கப் போகிறேன் செல்வா” என்று சொல்லிக் கொண்டு விடை பெற்றுச் சென்றார் கலெக்டர்.

எண்ணம் போல் வாழ்வு என்கிறார்கள். மனங் கொண்டது மாளிகை என்று பசப்புகிறார்கள்.கலெக்டர் தும்பைப்பூ உள்ளத்தோடுதான் திருவாடானைக்குப் புறப்பட்டார். அவர் சென்ற மோட்டார் திருவாடானைக்கு முப்பது மைல்களுக்கு இந்தப் பக்கமே புயலிற் சிக்குண்டது. ஐந்து நாட்களுக்குப் பிறகுதான் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். இத்தனை இன்னல்களைக் கடந்து சென்ற பிறகாவது அவர் இதயம் குளிரும் சேதி கிடைத்ததா? புயலில் சிக்கி மாண்டவர்களின் எண்ணிக்கையில் அந்த இளங் குறத்தியும் இடம் பெற்றிருந்தாள். பிணத்தைக்கூடக்கலெக்டரால் பார்க்க முடியவில்லை. மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தார். படித்தவர் பட்டம் பெற்றவர் என்றால் கண்ணீர் சிந்தக் கூடாது என்று வெள்ளைக்காரன் வகுத்து விட்டுப் போனான்!

“போன வெள்ளத்திலே என் சொந்தச் சகோதரியை இழந்தேன். இந்தப் புது வெள்ளத்திலே மற்றொரு சகோதரியைப் பறிகொடுத்தேன்” என்று வாய் விட்டுப் புலம்பினார் கலெக்டர்.

★

போன மகா மகத்தன்று—பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அந்தப் ‘பாவக் குத்தகை’ தினத்தன்று வஞ்சினிப்பட்டிக் குஞ்சிதபாதம் பிள்ளை தனது ஐந்து வயதுப் பஞ்சவர்ணத்தைப் பறிகொடுத்தார். ஒரே பெண்-அவளைத்தான் தன் செல்வக் குமாரி என்று எண்ணியிருந்தார் குஞ்சிதபாதம். அவள் காணமற்போன பிறகு அவர் பைத்தியம் பிடித்ததுபோல் அலைந்தார். சிதறிக் கிடந்த அவரது சொத்துக்களில் சில அவரது உறவினர்களால் சூறையாடப்பட்டன. மிகுதியாக இருந்தவற்றை விற்றுப் பணமாக்கிப்பஞ்சவர்ணத்தின் பெயராலே பிரசவ விடுதி ஒன்றைக் கட்டத் தொடங்கினார். கட்டிடம் முடியவில்லை. குஞ்சிதபாதம் கவலையால் உக்கி உக்கிச் செத்துப் போனார். அந்தப் பிரசவ விடுதியைத்தான் கலெக்டர் திறந்து வைக்கச் சென்றிருந்தார். திறப்பு விழாவை முடித்துவிட்டு வந்தபோது செல்வம் சொன்ன குறத்தி கதைதான் பஞ்சவர்ணத்தின் கதையென்றால் யார்தான் அழமாட்டார்கள்!

புயலை நினைத்துப் பாருங்கள்! அதிலே புதையுண்டு கிடக்கும் பஞ்சவர்ணக் கிளியை நினைத்துப்பாருங்கள். அந்தக்கிளிக்குப் பாலும் பழமும் தேடிக் கொடுத்து, பாதித் தூரத்திலே உறவினர்களில் ஒருமித்த எதிர்ப்பு சாவுக் கொண்டு கொத்திக்கொண்டு போன அந்தக் குறவாலிபனையும் எண்ணிப் பாருங்கள்.

பாசம் இழுக்கும் காந்தச் சிலையைப் பறிகொடுத்த பணக்காரக் குஞ்சிதபாதம், அந்தஸ்து, அதிகாரம் அத்தனைக்கும் அப்பாற்பட்ட நகை உணர்ச்சி பெற்ற கலெக்டர், அவர் மனைவி—இவர்கள் தானென்ன மறக்கப்படக்கூடியவர்களா?

தந்தையின் புதை குழி வஞ்சினிப்பட்டியில்! அவள் கணவனின் புதைகுழி மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குக்கிராமத்தில். அவளுடைய புதைகுழி திருவாடானையில்.

பாவம்! அவள் சாகும்போது என்னென்ன நினைத்திருப்பாள்! ஐயோ! நினைத்தாலே கண் கலங்கிறது.

மெருகு ஏற்றப்பட்ட உண்மைக் கதை இது.

இராவணன்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு இடுவது போல, யாகம் செய்வதற்கும் விண்ணினின்று மண்ணிற்கு மழைபெய்வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இக்கூற்றெல்லாம் மக்களை ஏமாற்றும் மடமைக் கருத்துக்கள். உழைக்காது உல்லாச வாழ்வு நடத்த ஒரு சில உண்மையற்றவர்களால் கூறப்படும் உளுத்துப்போன கருத்துக்கள் என்ற உண்மையை இராவணன் அறிந்தான். எனவே இப் போலிச் செயல்களுக்கு இராவணன் தன்னாட்டில் இடங் கொடுக்கவில்லை.

தசரதன் பொறுப்பற்றவன். தனக்குப் புதல்வன் வேண்டுமென்று நாட்டு மக்களின் பணத்தைக் கருவூலத்தினின்றும் கருணையில்லாமல் காடுகளில் திரிந்த ரிஷிகளுக்கு அள்ளிக் கொடுத்தான். நாட்டின் நலங் கருதும் மன்னவனின் நற்செயலா இது? இல்லை. இது சுயநலமிக்க சூழ்ச்சிச் செயலே. மக்களீந்த பொருளை மக்கட்குச் செலவிட்டு அவர்களை மகிழ்வித்து இலங்கை நாட்டை இன்ப நாடாக்கி வைத்த இராவணன் எவ்வாறு இதையெல்லாம் விரும்புவான்? நடுநிலைமையற்ற ஒரு சில நல்லறிவற்றவர்களே இராவணனை இகழ்வர்.

காமவயப்பட்டு இராமன் மனைவியாம் சீதையைக் கவர்ந்து சிறை வைத்தவன் இராவணன் என்று அவனை இகழ்வார்கள். சீதை அழகுடையவளாக இருந்திருக்கலாம்; அதே சமயத்தில் இராவணனுக்கும் காமவுணர்ச்சியிருந்திருக்கலாம். ஆனால் இதை வைத்துக்கொண்டு சீதையின் ஒப்பற்ற அழகிலே ஈடுபட்டு, பொங்கிவரும் காமவுணர்ச்சியை அடக்காமல் தன்னிச்சை தீரச் சீதையை இராவணன் கவர்ந்து வந்தான் என்ற கூற்றும், முடிவும் பொருத்தமற்றதாகும். தன் தங்கையாகிய சூர்ப்பனகைக்கு இராம இலக்குவனர் மன்னிக்க முடியாத அவமானத்தைச் செய்துவிடவே அதற்குப் பழி வாங்கவேண்டுமென்ற நோக்கத்துடனேதான் இராவணன் சீதையைக் கவர்ந்தானேயன்றி தன்னுடைய காம இச்சையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றோ, அல்லது அவளது அழகில் தன் அறிவையும் அகந்தையும் பறி கொடுத்தோ, அவன் இக்காரியத்தைச் செய்யவில்லை. இராவணன் வடிவழகில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்த அளவற்ற தேவமாதர் அவனது அரண்மனையில் பணிசெய்து வாழ்ந்து வந்தார்கள் என்று வால்மீகியாரே தன் இராமாயணத்தில் கூறியிருக்கிறார். இராவணனை விரும்பி வந்த பெண்களேயன்றி இத்தேவ மாதரை இவன் வற்புறுத்திக் கொணர்ந்தானில்லை. எனவே சீதையின் அழகைவிட ஒப்புயர்வற்ற முறையிலே அநேக அழகிகள் இராவணனது அந்தப்புரத்திலே இருந்தனர். அவர்களிடம் காணாத இன்பத்தையா இராவணன் சீதையின்பால் காணப் போகிறான்? அது ஒன்றுமில்லை! எனவே சீதையை இராவணன் கவர்ந்துவந்த நோக்கமெல்லாம் இராம இலக்குவனர் தன் தங்கைக்குச் செய்த அவமானச் செயலுக்குப் பழிவாங்கவேண்டுமென்றே தான் உண்மையாகவே சீதையின் ஒப்பற்ற அழகிலே மயங்கித் தன் காம இச்சையைத் தணித்துக்கொள்ள வேண்டுமென்று அவன் எண்ணியிருந்தானேயானால், தன் பாதுகாவலில் பல மாதங்கள் வரை தனித்திருந்த சீதையை அவன் எது வேண்டுமானாலும் செய்திருக்கலாமே? எந்த இழிமுறைகளைப் பின்பற்றியாவது அவளைத் தன் காமவெறிக்கு,—விரகப்பசிக்கு இரையாக்கியிருக்கலாமே? அவ்வாறு அவன் அவளைச் செய்ய விரும்பியிருந்தால், —ஏன் செய்தேயிருந்தால் யார் அவனைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்? அவ்வாறான முறைகளைக் கையாளாமல் ஆனந்த மிக்க அசோகவனத்திலே அவளை இருக்கச் செய்தான். அவளுக்கு வேண்டுமான உயர்ந்த உடைகளையும், உணவையும் தர ஆணையிட்டான். அவளை மனங் கோணாமல் நடத்தினான். இச்செயல் ஒன்றே இராவணனது பெருந்தன்மையைக் காட்டுகிறது. இராம இலக்குவனர்பால் தான் கொண்ட பகைமையைக் காட்டவே ஒரு அடையாளப் பொருளாக இராவணன் சீதையைக் கவர்ந்தான். **Ravana carried off Sita as a war prize and treated with courtesy and respect.** என்று பேராசிரியர் பூர்ணலிங்கம் பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய 'இலங்கைப் பெருவேந்தன்' என்ற தன் நூலில் கூறியுள்ளார்.

தனித்து வந்து தன் காதற் கருத்துக்களைக் கூறிய சூர்ப்பனகைக்கு இத்தகைய அவமானம் இராம இலக்குவனர் செய்த காரணத்தாலே இராம இலக்குவனர் இல்லாது தனித்திருந்த சமயத்தில் சீதையையும் இராவணன் கவர்ந்தான். படை கொண்டு இராம இலக்குவனரைத் தாக்கி, சீதையைக் கவர வேண்டும் என்ற எண்ணம் இராவணன் உள்ளத்தில் எழாமல் போனமைக்குக் காரணம், இராவணன் இராம இலக்குவனரைத் தன்னையொத்த பெருவீரர்கள் என்று எண்ணாது அவர்களை அலட்சியம் செய்ததேயாம். மேலும் இராம இலக்குவனரும் தங்களின் போலி ஆண்மையினையும் வீரத்தையும் போயும் போயும் ஒரு பெண்ணிடம் காட்டியுள்ளது வருந்தத்தக்கதே. இராம இலக்குவனர் என்ன முறையைப் பின்பற்றி இராவணன் தங்கைக்கு அவமானம் உண்டாக்கினார்களோ, அதே முறையைப் பின்பற்றி இராவணனும் சீதைக்கும் இராமனுக்கும் அவமானம் உண்டாக்கினான்.

—அடுத்த இதழில் முடியும்—

★ புலிக் குகை ★

அந்திவானம்--சிந்து பாடி ஓடும் காவிரிக்கரையோரம்-- அம்புகள் ஆயிரமாயிரம் பாய்ந்தும், மண்ணில் சாயாமல் தெம்புடன் ஓடி ஒளிந்துகொண்ட புலியினைத் தேடி வந்தான் தலைவன்! அதன் உயிர் கொல்ல! வீரன் என்று அவனை ஊர் புகழ்ந்தது என்றும் சொல்ல!!

பாதை வழி வந்தான்—ஒரு கோதையும் அவ்வழி வந்தாள்!

தலைவன் கண்டான்—தலைவி, தலைகுனிந்தாள்!

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்விதழும், குமிழ்சிரிப்பும் கூர்வேலாகிவிட்டது! தலைவன்மீது போர் தொடுத்தும் விட்டது. மலைத்தோளும், மணிமார்பும் தலைவிக்கு மயக்கத்தை மூட்டிவிட்டது...உடனிருந்த தோழி இதை உணர்ந்து விட்டாள். "வா, அம்மா" என்றாள். தலைவி 'உயிர்' வரப்பெற்றாள். அவன்மீது மேய்ந்திருந்த தன் வேல்விழிகளை வலிய மீட்டுக்கொண்டாள். குட்டி மான்போல் இதற்கு முன் குதித்துக் கிடந்த தலைவி, இப்போது 'இட்ட அடி நோக—எடுத்த அடி கொப்பளிப்பது' போல் ஏனோ தளர்ந்து நடந்தாள்.

புலியைத் தேடிவந்த தலைவன்—இப்போது புள்ளி மானைப் பின் தொடர்ந்தான்.

குளிர் நிலவுக்கு இரவும் பலியானது. தண்ணிலவின் ஒளிச்சிரிப்பில்; தளிர்க்காட்டுப் பஞ்சணையில்; பூவிரிந்த சோலையிலே; அந்தக் காவிரியின் தாலாட்டிலே; தலைவனும் தலைவியும், செந்தமிழும் இனிமையுமெனச் சேர்ந்து கிடந்தனர். சுந்தரத் தென்றலோ; அவர்களுக்குச் சொகுசான போர்வையாயிற்று!...ஈர உதடுகளை இருவரும் மாற்றிக் கொண்டனர். நேரமும், தன் பெயரை 'காலை' என்று மாற்றிக்கொண்டது...பிரிந்தனர். சென்றனர்.

★

குழல் ஒலி, யாழ் ஒலி, கூத்தொலி உன் குயில் குரலடி! உருவே! என் உறவே! என் ஊனே! அந்த ஊனின் உள்ளமே! உள்ளத்தினுள்ளே நின்ற கருவே! என் கற்பகமே! கண்ணே! கண்ணிற் கருமணியே! மணியோடு பாவாய்! காவாய்! என்ற தலைவன் பிரிந்தே போனான். அதற்குப் பின் வரவேயில்லை...அழுதாள்! அவன் சென்ற திக்கை நோக்கித் தொழுதாள்! தலையதுதான் எண்ணை நீவாதிருக்க; வளைக்கரம் தான் சோர்ந்து தொங்க, வழி சென்ற பக்கமெல்லாம் சென்றாள்; தலைவனைத் தேடினாள்; வாடினாள். தோழி வந்தாள்! "அம்மா! அவன் வீட்டைக் கண்டுவிட்டேன்" என்றாள். விரல்பட்ட வீணையானாள்! விசைபெற்ற பந்தானாள்! விரைந்தாள்! பறந்தாள்.

தலைவனின் தாய், வீட்டில் காய்களை நறுக்கிக்கொண்டிருந்தாள். பருவமிக்க தான், அழகு உருவமிக்க ஒருவாலிபனைப்பற்றி வினவுதல் முறையன்று என்று கொண்ட தலைவி, முதுகிழவிபோல் முகமதனைத் தன் முந்தானையால் முக்காடிட்டுக் கொண்டு, தூணுக்குப் பின்னால் நின்றுகொண்டு; கண்ணீர் துளிர்த்து வரும் விழியதனைத் துடைத்துக் கொண்டு, 'அம்மே! நின் மகன் எங்கே?' என்று கேட்டாள்.

கறி நறுக்கிக் கொண்டிருந்த தலைவனின் தாய்—பொக்கை வாய்தனைத் திறந்து, "எரிவாட்கள் சுழன்று போர் நடக்கும் காலம் இது, அம்மே! நாட்டின்மேல் அன்பு கொண்டோர் வீட்டிற்கோர் பிள்ளையாகப் போருக்கேகி, இறந்தோ அல்லது வீரனாகச் சிறந்தோ விளங்கும் வேளை இது அம்மே!! என் மகன் எங்கிருக்கிறான் என்று எனக்குத் தெரியாது. வரிப்புலி வந்து, சற்று நேரம் படுத்துவிட்டுக் குகையை விட்டு வெளியே போனதுபோல்-அவனைப் பெற்றெடுத்த வயிறு இதுதானம்மே! புலிக்கும் புதர்க்குகைக்கும் இடையே உள்ள உறவுதான்—எனக்கும் என் மகனுக்கும் உள்ள உறவு. புலி போகும் திசையை, குகை புலம்பிக் கேளாதம்மா!" என்று கூறிக் கறிகளை மீண்டும் நறுக்கினாள்.

காதற் பசியோடு வந்த தலைவி—தாயின் ருசிமிக்க கடமைப் பேச்சைக் கேட்டாள்!

குளிரோடையில் தான் சந்தித்த காதலன்—அதுவரை தனக்குக் காதகன் என்று எண்ணியிருந்த தலைவி—தன் காதலன் ஓர் கடமை வீரன் என்று தெளிந்தாள்! தன் சிறுமைக்கு வெட்கி ஒளிந்தாள்! மாந்தளிரால் மெல்லுடலும், மணக்கும் செந்தாமரையிதழால் வாயிதழும் கொண்ட தலைவி—சொந்தக் காதலை மறந்தாள். சுடர்மிகு வாளேந்திக் களம் புகுந்தாள்!

"சிற்றில் நற்றூண்பற்றி—நின் மகன்
யாண்டுள னோ என வினவுதி; என் மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறு இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்க ளத்தே!"
(புறநானூறு)

—கோ. இறைமுடிமணி.

பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி.

பதில் தருகிருர்

நா. வணங்காமுடி திருவள்ளூர்

ஐம்படைத்தாலி என்னும் பதம் புறநானூற்றில் வருகிறது. அதற்குச் சரியான பொருள் என்ன? விளக்கம் தேவை.

ஐம்படைத்தாலி குழந்தைகளின் அரைஞாணில் சேர்த்து அணியப்படுவது. பிள்ளைகளுக்கு பேய் பூதங்களால் தீங்கு நேரிடும் என்ற அச்சம் முற்கால மனித இனங்கள் எல்லாவற்றிலும் இருந்தன தமிழரிடமும் இருந்தது. அதுவகையில் பாதுகாப்புக்காகவே ஐம்படைத் தாலி அணியப்பட்டது. அதில் காப்புக்கடவுளாகிய திருமாலின் ஐந்து ஆயுதங்கள் - சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு ஆகியவை பொறிக்கப்பட்டிருந்தன.

◉

சீ சு. தேவராசன், சிறுணதயூர்.

1. பெண் புலவர்களில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர் யார்?

2. தமிழ்நாட்டைப் பற்றிச் சிறப்பாக எழுதிய மேல்நாட்டுப் புலவர்கள் யார்?

3. கண்ணகிக்குக் குழந்தைகள் இருந்ததா?

4. தமிழில் இல்லாத சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றனவா?

1. பெண் புலவர்களில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர்கள் பலர். ஔவையார் என்ற ஒரே பெயருடன் பல காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்து உள்ளனர். இவர்களில் சங்க காலத்தில் அதாவது கி. பி இரண்டு அல்லது மூன்ருவது நூற்ருண்டுகளில் வாழ்ந்த ஔவையார் தான் மிகவும் சிறப்புடையவர். இவர் பாடல்கள் மிகப் பல, புறநானூறு, அகநானூறு முதலிய சங்கத்தொகை நூல்களில் கிடைக்கின்றன.

கம்பர், புகழேந்தி காலத்தவராக ஒரு ஔவையார் இருந்திருக்கக்கூடும். அவர் பெயரால் தனிப் பாடல் திரட்டுகள் பல பாட்டுக்கள் தருகின்றன. அசதிக்கோவை என்ற நூலில் ஒரு பத்துப் பாட்டுக்களே நூல் வடிவாகக் கிடைத்துள்ளன. இவை மிகவும் அழகிய பாக்களே.

பள்ளிப்பிள்ளைகளுக்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஏற்றிய ஔவையார் கம்பர் கால ஔவையாராய் இருக்கலாம். அல்லது அக்காலத்துக்குச் சற்றுப் பிற்பட்டவராகவும் இருக்கலாம். அவர் வெற்றிவேற்கை இயற்றிய அதிவீரராம பாண்டியனுக்கு (17 ம் நூற்ருண்டு) முற்பட்டவராய் இருத்தல்வேண்டும். தமிழகத்தில் புதிய கல்வித்திட்டம் ஏற்பட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வகுக்கப்பட்டபோது அவர் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் பாடல்கள் கல்விக்காக அமைந்தவை.

ஔவை குறள் என்ற நூல் எழுதிய ஔவையார் கடைசிஔவையாராக இருக்கவேண்டும். அவர் நூலும் சிறப்புடையதே.

சங்க காலத்திலேயே ஔவையாருக்கு அடுத்தபடியாகக் கூறத்தக்க பெண்பால் புலவர் காக்கைபாடினியார், நச்செள்ளையார். இவர் தவிர முப்பதுக்குக் குறையாத பல வகைப்பட்ட பெரும்புலவர்களும் இருந்தனர்.

இடைக்காலத்திலும், அணிமைக் காலத்திலும் பெண்புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அவர்களில் ஆழ்வார்களில் ஒருவராகிய நாச்சியார், நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்கால் அம்மையார் குறிப்பிடத்தக்க கவிதை ஆற்றல் உள்ளவர்கள்.

2. தமிழ்நாட்டைப் பற்றிச் சிறப்பாக எழுதிய மேல்நாட்டுப் புலவர்கள் பலர். அவர்களுள் திருக்குறள், திருவாசகம் ஆகிய நூல்களின் பெருமையை மேலை உலகுக்கு எடுத்து விளக்கியவர் டாக்டர் ஜி. யு போப் நம்காலத்தில் திருக்குறளின் பெருமையைப் புது முறையில் உலகுக்கு எடுத்துரைத்துள்ளவர் நோபல் பரிசுபெற்ற ஜெர்மானிய அறிஞர் ஆல்பிரட் ஷ்வைட்சர் ஆவர் தமிழ் இனமொழிகளின் பெருமையை உணர்த்தியவர். டாக்டர் கால்டுவெல். சிந்து வெளியிலுள்ள நாகரிகம் தமிழ் இனநாகரிகமே என்றும் அவர்கள் மொழி தொல் பழங்காலத்துத் திராவிடமே என்றும் உலகறிய விளக்கியவர் அணிமையில் (14-1-56 ல்) காலம் சென்ற தூய திரு ஹீராஸ் ஆவர்.

3. கண்ணகிக்குக் குழந்தைகள் கிடையாது. ஆனுல் மாதவி, கண்ணகி தெய்வமான பின் கோவலனுக்கும் தனக்கும் பிறந்த மணிமேகலையைக் கண்ணகி புதல்வியென்று பற்றின் காரணமாகவும், மதிப்பின் காரணமாகவும் கூறினுள்.

4. ஒரு மொழியில் இல்லாத சொற்கள் மற்றொரு மொழியில் இருப்பது இயல்பு. இது மட்டுமே ஒரு மொழிக்குச் சிறப்புத்தராது. அத்தகைய சொற்களின் தொகையும்பண்பும்தான் மொழிக்குச் சிறப்புத்தரும்.

தமிழில் இல்லாத சொற்கள் ஆங்கிலத்தில் பல உண்டு. பொது வழக்கிலும் உண்டு. அறிவுத்துறையிலும் உண்டு. பண்பாட்டுத் துறையிலும் உண்டு இதுபோலவே ஆங்கிலத்தில் இல்லாத சொற்களும் அவ்வெல்லாப் படியிலும் தமிழிலும் உண்டு. ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே இங்கே தரமுடியும்.

உடன்பிறந்தான், உடன்பிறந்தாள், மாமன் அல்லது சிற்றப்பன், அத்தை அல்லது சிற்றன்னை, மைத்துனன் அல்லது உடன் பிறந்தான் மைத்துனி அல்லது உடன் பிறந்தாள், ஆண் அல்லது பெண் நண்பன்; விருந்தளிப்போன்.

இந்தச் சொற்களைத் தவிர பெயர் அடைகளில் மேம்பாட்டு அளவை, தனி மிகை அளவை, இணைவு இடப் பெயர்கள் முதலியன தமிழில் எளிதாக ஆங்கிலப்பண்புபட மொழி பெயர்க்கக் கூடாதவை.

ஆங்கிலத்திலும் இதுபோல காய்க்கு எதிராகக் கனி, பழம்; அண்ணன், தம்பி; மாமன், மைத்துனன்; அத்தை, மைத்துனி; கனவுக்கு எதிராக நினைவு ஆகிய சொற்களும் தன் வினைக்குஎதிராகப் பிறவினை; வினையாலணையும் பெயர்; இரண்டு சொற்களுக்கு மேற்பட்ட தொகைகள். குறிப்பு வினை, குறிப்பு வினைப்பெயர் ஆகியவை ஆங்கிலத்தில் எளிதில் மொழிபெயர்க்கப்பட முடியாதவை

அறிவு நூல் துறையிலும், ஆராய்ச்சித் துறையிலும் ஆங்கில மொழி இன்றும் அறிஞர் வழக்கு மரபில் உள்ளது. ஆனுல் தமிழ் அறிவு மரபு இழந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆய்விட்டன. மொழி ஆராய்ச்சியாளரும், இலக்கிய ஆராய்ச்சியாளரும் தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சியாளரும் சேர்ந்து இனித்தான் தமிழை அறிஞர் கையாளத்தக்க மொழியாய் ஆங்கிலத்துடன் போட்டியிடும் தகுதி வாய்ந்ததாக ஆக்கமுடியும். ஆனுல் இந்தப் பண்பு தமிழுக்கு மற்ற ஆசிய மொழிகளைக் காட்டிலும் சமஸ்கிருதத்தைக் காட்டிலும் மிகுதியாக உண்டு. தமிழர் போதிய முயற்சி செய்தால் ஆங்கில முதலிய மேலைநாட்டு மொழிகளுடன் அது போட்டியிடத் தக்கது மட்டுமல்ல. அவற்றைத் தாண்டி உலக நாகரிகத்துக்கு வழிகாட்டும் பண்புகள் அதில் நிறைய உண்டு. வருங்கால உலகில் மேலை மொழிகள் வளர்ச்சி குன்றிய பின்னும் நீடித்து அறிவு மொழியாக வளரும் உயிர்ப் பண்பு தமிழில் மட்டுமே உண்டு.

★ ★ ★

பிப்ரவரி 20 !
பொது வேலை நிறுத்தம்

தி. மு. க. மாணவர் கிளை அமைப்பாளர் வேண்டுகோள்

பிப்ரவரி 20 தேவிகுளம், பீர்மேடு பிரச்சினை சம்பந்தமாய், மத்திய சர்க்காரின் அநீதியை எதிர்த்து "பொது வேலை நிறுத்தம்" செய்து கண்டனக் குரல் தெரிவிப்பது எனத் தமிழகத்துத் தலைவர்கள் கூட்டணி முரசறைந்திருப்பதை மாணவர் சமுத்தாயம் நன்ருக உணர்வார்கள்.

டில்லியின் தீர்ப்பு வெளிவந்தவுடனேயே, மாணவர் சமுதாயம், தமிழரின் மனக்கொதிப்பை, அகில உலகும் அறியும் வண்ணம் ஊர்வலங்கள், ஸ்ட்ரைக்மூலம் தெரிவித்தனர். தி. மு. க. மாணவர் கிளை அதில் பெரும் பங்கு பெற்றது. தி. மு. க. மாணவர் கிளை தலைமை நிலையம், எல்லாக் கட்சியிலும் சேர்ந்த மாணவர்களையும், அவர்தம் உரிமை வேட்கைக்கு — தமிழ் உணர்விற்குப் பாராட்டுகிறது; வாழ்த்துகிறது.

பிப்ரவரி 20—நாட்டின் மனநிலையை மமதை நிறைந்த டில்லிக்கு உணர்த்தும் நாள். விடுதலைப் படையின் முன்னணியினர் என்ற பெருமையைத் திராவிட மாணவர் சமுதாயம் என்றும் காப்பாற்றத் தவறியதில்லை. பிப்ரவரி 20- ஆலைத்தொழிலாளர், உழவர்பெருமக்கள்—நடுத்தர வகுப்பினர்—அத்தனைபேரும் அநீதிக்கு எதிரான அணிவகுப்பில் திரளும் நாள்! அந்த நாளை வெற்றிநாளாக்க, தலைவர்கள் வேண்டுகோள் விட்டாகி விட்டது. சிதம்பரத்தில் கூடிய தி. மு. க. பொதுக்குழு ஆதரவைப் பதிவு செய்தாகி விட்டது. எனவே தி. மு. க. மாணவர் கிளைத் தோழர்களே! பிப்ரவரி 20—கல்லூரிகள் மூடிக் கிடக்கட்டும். பள்ளிகள் பயிலுவோர் இல்லாதிருக்கட்டும். கொடி, கூடாரமல்ல முக்கியம். நமது குடிக்குக் கேடு சூழ்ந்தது டில்லியால். அதனை நீக்கவேண்டுவது நமது கடமை. தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், பிரஜா சோஷியலிஸ்ட், இன்னும் எந்தக் கருத்துடனும் சேராதவர்கள்—அத்தனைபேருடனும், கைகுலுக்கி, தோளோடு தோள் சேர்ந்து, ஒத்துழைத்து, பிப்ரவரி 20ந் தேதி வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கும்படி தி. மு. க. மாணவர் கிளைப் பொறுப்பாளர்களையும், பொதுவாய் எல்லாக் கல்லூரி மாணவர்களையும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமைதி—கட்டுப்பாடு—கண்ணியம்—இவை அண்ணு அறப்போருக்கு நமக்களித்துள்ள அற்புத ஆயுதங்கள். அதனைப் பெற்ற நமக்கு வெற்றியன்றித் தோல்வியேது? இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?

பிப்ரவரி 20—மானத்துக்கு அறைகூவல்—மறந்துவிட வேண்டாம் என்று மாணவர்கள் சகலரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

டி. கே. பொன்னுவேலு.

★ ★ ★

வெண்பாப் போட்டி

வாழ வகுப்போம் வழி.

(புயல் நிவாரண வெண்பா)

சென்ற இதழில் புயல் நிவாரண வெண்பாப் போட்டியின் பரிசு பெற்ற வெண்பாக்களையும் தகுதியுடைய வெண்பாக்களையும் பிரசுரித்தோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களையும் பிரிசுரித்துள்ளோம்.

கன்னித் தமிழகத்திற் கண்ட பெரும்புயலாற்
றுன்னிப் பலவிடுக்கண் தோய்ந்ததக்தோ-இன்னலுறுந்
தோழர் படுந்துயரந் தோன்றுமற் றென்னடு
வாழ வகுப்போம் வழி.

—டாக்டர் எ. சிவக்கொழுந்து R. M. P. மேல்கறைப்பட்டி.

★

கூறுதற்குக் கொஞ்சமோ? கோரப் புயற்சேதம்
ஆறுதற்கு ஆறுது அன்னமே!-தேறுதற்குத்
தோழமையோ(டு) ஈந்துநிதி துன்புற்ற தென்னகத்தார்
வாழ வகுப்போம் வழி.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

★

வெள்ளக் கொடுமையினல் வெவ்வியபேய்க் காற்றதனல்
உள்ளம் உடைந்தொல்கு நங்கேளிர்-எள்ளளவும்
தாழா முறைபுதுக்கித் தண்டமிழின் வண்ணமுற
வாழ வகுப்போம் வழி.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

பேயிடத்தைப் பண்படுத்திப் பேதமையால் துன்புற்றுத்
தாயிடத்தை நாடிவரும் சோதரரை-நேயமுடன்
சூடித் திரைமுழங்குஞ் செந்தமிழ்நாட் டெல்லைக்குள்
வாழ வகுப்போம் வழி.

—ஆரை. நா. கணபதி, நத்தம்கோவில்பட்டி.

★

ஆளுபவர் நம்மை அலட்சியமே செய்திடினும்
மாளுபவர் நம்மக்கள் ஆகுமன்றோ!-நீள்புவியில்,
சூழ்புயலால் துன்புறுவோர் தம்மைநாம் நல்லன்பால்
வாழ வகுப்போம் வழி.

—எஸ். சேதுராமன், யாழ்ப்பாணம்.

★

செத்துக் கிடக்கின்ற தென்னகத்தின் தென்பாகம்
புத்துயிரைத் தேடிக்கண் பூத்ததுவே-சற்றுமுன்னல்
பாழும் புயற்காற்றில் பாதிக்கப் பட்டோரை
வாழ வகுப்போம் வழி.

—ப. கணபதி, சோழபுரம்.

★

கடும்புயலால் வெள்ளக் கொடுமையால் மக்கள்
படுந்துன்பம் காணீர்! பணத்தைக்-கொடுத்தருளீர்!
சோழரைப் பாண்டியரைச் சூழ்அல்லல் போக்கிஅன்னர்
வாழ வகுப்போம் வழி.

—ஆ, கோவிந்தராசன், குடந்தை.

★

"வாழ வழியற்ற வையத்தோர்க் கெல்லாம்
வழுவாது வாழ்வளித்த வண்டமிழர்-வாழுமிடம்
வீழப் பெருமழையும் பேய்க்காற்றும் கொண்டதனல்
வாழ வகுப்போம் வழி.

—பொ. தக்கணாமூர்த்தி, அயன்புரம்.

★

கன்னித் தமிழர் கடும்புயல் காரணமாய்
மண்ணில் மயங்கி வதிகின்றார்-எண்ணியே
தோழா! நிதிபல தந்தேதான் அன்னவரை
வாழ வகுப்போம் வழி.

—அரு. ராமசாமி, இலக்குமிபுரம்.

பேய்க்காற்றும் வேண்டாப் பெருமழையும் மக்கள்
உயிர்பறித்தே போகிடினும் மெய்ப்புலவீர்!-பேய்க்காற்
சூழ்ச்சியதால் அல்லலுற்றோர் தாம்பெற்ற துன்போழித்
வாழ வகுப்போம் வழி.

—து. பெருமாள், சென்னை-23

★

கொட்டும் மழைபெருகிக் கோரப் புயல்வீசி
வெட்டிநிலம் வீழ்த்தியதே வீரநாட்டை-சிற்றிடையே!
ஆலையிட்ட கன்னலென அல்லலுறும் மக்களினை
வாழ வகுப்போம் வழி.

—மா. பாஸ்கரன், சிவகெங்கை

★

வேரோடு தீய்ந்திட்டார் வெள்ளத்தால் நம்மக்கள்
சீரான செல்வம் சிதறிற்றே-பாரீர்!
இழந்த பொருளதனை ஈட்டித்தான் தந்தவரை
வாழ வகுப்போம் வழி.

—மு. ச. சேகரன், மைலாப்பூர்

★

தஞ்சைப் புயலடித்த தாலே உருகிப்
பஞ்சைகள் ஆய்விட்டார் நம்மக்கள்-அஞ்சேல்
தளரா ஊக்கமொடு தக்கதோர் செல்வமீந்து
வாழ வகுப்போம் வழி.

—பா. பழனிச்சாமி, ஈரோடு

★

தாயகம் போற்றித் தமிழ்த்தொண்டு தானாற்றிப்
பேயகம் மாற்றப் பெரும்பணிதான்-செய்தே!
ஆழியது போற்பரந்த அன்னை மொழியதுதான்
வாழ வகுப்போம் வழி.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

★

குடிக்கக் கூழின்றே குந்தவோர் இல் லின்றே
படிக்க ஏடின்றிப் படுந்துன்பம்-கோடியடா!
பாழும் கண்ணீரைப் போக்கி அவர்நலமாய்
வாழ வகுப்போம் வழி.

—அ. தங்கவேலன், காரைக்கால்.

★

புயலென்னும் மூர்க்கன் புகுந்தேதான் நாட்டில்
தயவின்றிக் கொன்றிட்டான் பல்லோரை-ஐயய்யோ!
வாழ்விழந்து வாட்டமே உற்றிட்டார் தம்மைநாம்
வாழ வகுப்போம் வழி.

—க. தமிழ்ப்பித்தன், ரேணிகுண்டா.

★

தென்னகத்துப் பேரெழிலைத் தீய புயலொழிக்க
துன்பத்தில் வாடுகிறார் தூய்தமிழர்-அன்புடையீர்
கோழைகள் அல்லர்நாம் செல்வங் குவித்தவர்கள்
வாழ வகுப்போம் வழி.

—அ. சி. கந்தசாமி, அய்யம்பாளையம்.

★

வாழ்வழித்த வெம்புயலும் பார்ப்பனராட் சிப்புயலும்
வாழவிடா வகையாக நம்நாட்டை!-ஆழ்ந்தேபார்
தாழ்வு தனைநீக்கித் தக்கநிதி தந்தேதான்
வாழ வகுப்போம் வழி.

—ஒய். ஜேகப், ஆயர்பாடி.

★

வஞ்சப் புயலாலே வாழ்விழந்த நம்மக்கள்
அஞ்சி வதிகின்றார் ஐயய்யோ!-துஞ்சாதீர்
வாழ்வாங்கு வாழ்ந்த வளப்புமிகு நம்மக்கள்
வாழ வகுப்போம் வழி.

—கோவி. அண்ணாமலை, ஓடசல்பட்டி.

★

ஒதுங்கச் சிறுகுடிசை, உண்ண உடுக்க
எதுவும் இலாமல் இழந்தே-கதியற்றுப்
பாழும் புயலதனல் பாதிக்கப் பட்டோர்தாம்
வாழ வகுப்போம் வழி.

—சே. ஆ முத்துக்குமரன், சேலியமேடு

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எஸ். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.